Registered No. M. 2330

SIDDHANTHAM
Vol. 26—No. 9

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே'

மலர் 26 | விஜய புரட்டாசி 1953 செப்டம்பர் | இதழ்

உள்ளுறை | பக்கம்

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| காட்டு ஒலி | ... | 385 |
| திருவெருக்கத்தம் புலியூர் | ... | 392 |
| சங்கற்ப நிராகரணம் | ... | 394 |
| நிலத்தின் தோற்றம் | ... | 399 |
| பிறப்புநாள் வாழ்த்துக் கூட்டம் | ... | 407 |
| தலைமையுரையில் சிறந்த பகுதிகள் | ... | 409 |
| மதிப்புரை | ... | 415 |
| ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள் வரலாறு | ... | 417 |
| செ[illegible] | ... | 429 |

SL
R673m211,N48
N53.26.9
5c. 186844

[illegible]. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
[illegible]ரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.
சித்தாந்த மகா சமாஜம்
[illegible]ரு (ஜோன்ஸ் ரோடு), சைதாப்பேட்டை, சென்னை-15

Reg. M. 2330

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 26 | விஜய புரட்டாசி 1953 செப்டம்பர் | இதழ் 9

## நாட்டு ஒலி

### உணவுக் கொள்கைகள்

" ஊனொன்றுண்டல் நன்றென ஊனொன்றுண்டல் தீதென
ஆனதொண்டர் அன்பினாற் பேசநின்ற தன்மையான் "

1. இந்த முறையில் ஞானசம்பந்தப் பெருமான் 14 நூற்றாண்டுகளுக்குமுன் எந்த உணவு நன்று, எந்த உணவு தீது என்ற வாதம் உலகில் இருப்பதைப் பற்றிக் கூறியிருக்கின்றார். இந்த வாதம் அவருக்குமுன் பல நூற்றாண்டுகளாகவே நமது நாட்டில் இருந்திருக்கின்றது. பௌத்த சமண சமயங்கள் வேறுபட்டுப் போவதற்கு இந்த வாதமே காரணம் என்க. தற்போதும்கூட சமய ஈடுபாடுகளில் இந்த வாதம் முதன்மையில் நிற்கிறதல்லவா?

சில ஆண்டுகளுக்குமுன் அமெரிக்க நாட்டு சமயப் பிரசாரகர் ஒருவர் நமது நாட்டிற்கு வந்து பல இளைஞர் சங்கங்களிலும், பல சொற்பொழிவுகளை நிகழ்த்திக் கொண்டே வந்தார். சொற்பொழிவு முடிந்தவுடன் யாராவது கேள்விகள் கேட்கும்பொழுது விடைகள் கூறுவார். ஒருமுறை ஒரு கூட்டத்தில் கேள்விகள் கேட்கப்படும் சமயத்தில் ஓர் இளைஞர் ஊன் உணவு நல்லதா அல்லது தீயதா என்று கேட்டார். அதற்கு அந்தப் பிரசாரகர் நல்லதும், கெட்டதும் ஏன்று கவலை வேண்டியதில்லை. விலங்குகள் மானுட உணவிற்காக உண்டாக்கப்பட்டன என்று

# திரு. வி. க. மண்டப அமைப்புக் கூட்டம்

சென்னை இராயப்பேட்டை **ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின்** திறந்த வெளியில், **திரு. வி. க. அவர்களின் பெயரால்** ஒரு பிரசங்கமண்டபம் அமைப்பது பற்றி **ஆலோசிக்க 6–9–53** ஞாயிற்றுக்கிழமை மாலை ஷை சபையில் தர்மரட்சாமணி திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர், பி.ஏ. பி. எல்., எம். எல். சி. அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கோவை திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் உள்ளிட்ட பல அன்பர்கள் வந்திருந்தனர்.

எழுபது வயது நிரம்பிய தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களின் உடல் நிலை வளம்பெற வேண்டிப் பிரார்த்தனை செய்யப்பட்டது.

கீழ்க்கண்ட அன்பர்களைக் கொண்ட **திரு. வி. க. மண்டப அமைப்புக் குழு**வொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. **போஷகர்** : ராஜா சர் எம். ஏ. முத்தைய செட்டியார், எம். எல். ஏ. **தலைவர்** : சர். பி. டி. ராஜன். **உபதலைவர்கள்** : திருவாளர்கள் (1) கே. பாலசுப்பிரமணிய ஐயர், எம். எல். சி. (2) சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் (3) டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எம். எல். சி. (4) சி. ஆர். ஸ்ரீநிவாசன் (5) டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார், எம். பி. (6) எம். பக்தவத்சலம், எம். எல். சி. (7) கருமுத்து - தியாகராய செட்டியார் (8) எஸ். இராமசாமி நாயுடு (9) டி. செங்கல்வராயன் (மேயர்) (10) வி. எஸ். தியாகராஜ முதலியார். **காரியதரிசி** : திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை. **பொருள் காப்பாளர்** : திரு. **"கல்கி"** கிருஷ்ணமூர்த்தி. **அமைப்புக் குழு அங்கத்தினர்** : திருவாளர்கள் (1) வி. சி. சுப்பைய கவுண்டர், (2) ஒ. பி. ராமசாமி ரெட்டியார் (3) சி. எம். ராமச்சந்திரன் செட்டியார் (4) டி. எம். சின்னைய பிள்ளை (5) சி. எஸ். லோகநாத முதலியார் (6) எம். டி. டி. குமரசாமி முதலியார் (7) என். எம். ஆர். சுப்பராமன் (8) சா. கணேசன் (9) கே. ஏ. பி. விசுவநாதம் (10) ஆர். வி. லக்ஷ்மி நாயுடு (11) டி. கரிய கவுண்டர் (12) டி. பி.

விவிலிய நூல் கருத்தை எடுத்துச் சொன்னார் : அதுகேட்ட மற்றவர் ஓர் உயிரைக் கொன்றல்லவோ அதன் ஊனைத் தின்னவேண்டும். அவ்வாறு கொலைசெய்தல் சரியா என்று கேட்டார். அதற்குப் பிரசாரகர் கடவுள் படைப்பிலேயே யாதாவது ஓர் உயிரைக் கொன்றுதான் பிழைக்கவேண்டும். மரக்கறி உண்பவர்களும்கூடச் செடிகளைக் கொன்றுதானே அதன் விளைவுகளை உண்கிறார்கள். செடிக்கும் உயிர் உண்டென்று திரு. போஸ் அவர்கள் சொல்லியிருக்கிறதில்லையா என்று விடை கூறினார். இந்த வாக்கு வாதத்தினால் ஏற்பட்ட நிலை எதுகாறும் செல்லுகிறதென்று ஒரு சிறிது ஆராய்வோம்.

2. மேலே கூறியபடி அமெரிக்கப்பிரசாரகர் சொன்ன விடை சரியானதா என்ற கேள்வி பிறக்கிறது. அதனைக் கேட்ட சில பேர்களுக்கு அவர்சொன்ன முடிவே திருப்தி அளிக்கும். ஆனால் நன்றாய் ஆராய்ந்து சமய ஆராய்ச்சியில் ஈடுபட்ட மக்களுக்கு அந்த முடிவானது தக்க ஆறுதல்தராது. உலகத்தில் உயிர்கள் வாழவேண்டுமென்றால் பிறஉயிர்களைக் கொன்றுதான் பிழைக்கவேண்டுமா ? அதுதான் இறைவனுடைய படைப்பின் நோக்கமா? மேலும் ஊனின் பொருட்டுப் பிற உயிர்களைக் கொலை புரிதல் எதுகாறும் செல்லுகின்றது ; கொலை புரிதல் ஏன் தடுக்கப்பட்டிருகின்றது ; உயிர்களில் ஒன்று முதல், ஆறு அறிவுவரை படிப்படியாக உள்ளவைகள் இல்லையா ? அவைகளின் ஊனைப் பெறும் பொருட்டுச் செய்யும் கொலையானது பல திறப்பட்டதுவாக வாய்ந்திருக்கிறதில்லையா ? மயிரை வெட்டுதல் முதற்கொண்டு ஆடு, கோழிகளை நறுக்குதல் வரையில் உள்ள கொலைகளில் தாரதம்மியங்கள் இல்லையா ? கொலை மறுத்தலில் கொலை செய்யப்படுகிறவர்கள் அடையும் தீங்கினை ஒத்தல்லவா பாவம் கணிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே மேலே கூறிய பிரசாரகர் தந்திருக்கும் முடிபு திருப்திகரமானதா என்று அறிஞர்கள் ஆராயவேண்டும். இந்த முறையில் ஆராய்ந்தால் ஊன் உணவு நன்று, தீதா என்று ஒருவாறு கூறமுடியும்.

3. இக்கேள்வி[illegible] முடிவாக ஆராய்வதற்கு முந்தி உலகத்தில் [illegible] வருகின்ற [illegible] செய்திகளைக் குறிப் [illegible] வேண்டும். [illegible] குறித்த [illegible]கரின் கட்சியில்



பேசுகிறவர்கள் தற்காலத்திலேயோ, அல்லது முற்காலத்திலேயோ உலகத்தில் பெரும்பான்மையான உயிர்கள் எந்த உணவை உண்ணுகின்றன ? மனிதரில் பெரும்பான்மையானவர்கள் எந்த உணவை உண்ணுகிறார்கள் ? என்று கேட்கிறார்கள். புள்ளி விவரத்தைப் பார்த்தால் அவர்கள் சொல்லுவது சரி என்றுதான் தோன்றும். தாழ்ந்த உயிர்களில் ஊர்வன, தத்துவன, பறப்பன, நடப்பன முதலியவைகள் எல்லாம் வலிமை உயிர்கள், வலிமையில்லாத உயிர்களைக் கொன்று தின்பது இயல்பாக இருக்கின்றது. ‘ பெருமீனுக்குச் சிறுமீன் இரை என்பது ஒரு பழமொழியே ஆகிவிட்டது. ஆறறிவுயிராகிய மனிதர்களிலும் ஒன்றிரண்டு நாடுகளைத் தவிர மற்ற எல்லா நாடுகளிலும் ஊன் உணவையே விருப்பத்துடன் உட்கொள்ளுகிறார்கள். மேல் நாட்டு மருத்துவர்களும் ஊன் உணவு விலக்கப்பட்டதல்ல என்கிறார்கள். உலகில் வெப்பதட்ப நிலையை ஆராய்ந்தால் தட்பம் மிகுதியாக இருக்கும் இடங்களிலெல்லாம் ஊன் உணவுதான் உணவாக இருக்கின்றது. மிகுதியாக வெப்பம் உள்ள இடங்களில் மட்டும் மரஉணவு போற்றப்படுகின்றது. புள்ளி விவரங்களை எடுத்துப் பார்க்கின் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் ஊன் அருந்துகிறவர்களாகவும், மற்ற ஒரு பெயர்மட்டும் மரக்கறி உண்ணுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் மானுட உடல் அமைப்பும், வாயுவின் வெப்பதட்பமுமே ஆகும். இந்தக் காரணங்களை வைத்துக்கொண்டுதான் மேலே கூறிய பிரசாரக இனத்தார்கள் வாதாடுகிறார்கள்.

4. மனிதர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது. அப்பெருக்கத்திற்கு ஏற்றபடி உணவுப் பொருள்களையும், பெருக்கவேண்டி நேரிடுகிறது. வெவ்வேறு நாட்டு அரசியல்களில் அவரவர்கள் நாட்டுப் பெருக்கத்திற்குத் தக்கபடி உணவுப் பொருள்கள் பெருக்கப்படுகின்றனவா என்ற கேள்வி எங்கும் கேட்கப்படுகின்றது. முன் காலங்களில் இந்தக் கேள்வியை வர்த்தக சமூகத்தார்களே கேட்டுக்கொண்டும் சமாளித்துக்கொண்டும் வந்தார்கள். ஆனால் சென்ற சில நூற்றாண்டுகளாக அரசியலார்கள் இந்தக் கேள்வியை எடுத்துக்கொண்டு

அதற்கு ஒருதீர்வு காண முயலுகிறார்கள். சென்ற இரண்டு போர்களிலும் இந்தக் கேள்வியே தலைசிறந்திருந்தது. அரசியலார்கள் பலவேறு கட்டுப்பாடுகளை நுழைத்து உணவுத் திட்டத்தைச் சமாளித்து வருகின்றனர்.

மனிதர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருக்கமடைவதில் அப்பெருக்கத்தை குறைக்கும் காரணங்கள் போர்களும், நோய்களுமே ஆகும். மானிடப் பெருக்கத்தைக் குறைக்கவே போர் ஏற்படும் என்று மகாபாரதம் கூறுகிறது. அக்கொள்கையைத் தற்கால நாகரிகம் வெறுக்கின்றது. போரையும், நோயையும் தொலைக்கவேண்டுமென்பது நாகரிகத்தின் நோக்கம். இவ்விரண்டையும் தொலைத்துவிட்டால் மானுடப்பெருக்கம் தங்குதடையின்றி ஓங்கி வருமல்லவா? அதற்கு ஒரு தீர்வு காணவேண்டித் தற்காலத்தில் மற்றொரு இயக்கம் தோன்றியிருக்கின்றது. அந்த இயக்கம்தான் ‘கருத்தடுப்பு’ என்பது. கணக்கற்ற மருத்துவ விஞ்ஞானிகள் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். தற்போது இந்திய விஞ்ஞானி ஒருவர் இதில் வெற்றி பெற்று ஒருவகை மருந்தையும் கண்டுபிடித்திருக்கின்றாரென்று சிலநாளின் முன் செய்தித்தாள்கள் கூறின. ஆனால் இந்த முயற்சிக்குச் சிலசமயக் கொள்கைகள் எதிர்ப்பைக் காட்டுகின்றன.

5. மனிதர்கள் பெருக்கமடைகிறாற்போல விலங்கினங்களும் பெருக்கமடைகின்றன. ஆனால் அவைகளிலே வலிமையுள்ளவைகள் வலிமையில்லாதவைகளைக் கொன்று தின்னுகிறவகையில் பெருக்கமானது, தடைபடுகின்றது. விலங்குகளில் இரண்டு வகையுண்டு, மானுடர் உண்ணும் வகை, உண்ணாவகை என்பன. உண்ணும் வகைகளில் ஆடு, கோழி முதலியவைகளும், உண்ணாவகையில் காட்டுவிலங்குகள், காட்டுப் பறவைகள் முதலியனவும் சேரும். வீட்டு விலங்குகளைக் காட்டு விலங்குகள் கொன்றபோதிலும், காட்டுவிலங்குகள் பெருக்கமடையாது. குறுகிக்கொண்டே வருகின்றன. வீட்டு விலங்குகளோ பெருகிக்கொண்டு வருகின்றன. அதற்குக் காரணம் மனிதனுடைய முயற்சிதான். உணவுப் பொருள்களைப் பெருக்கவேண்டிய நோக்கத்தின் பேரில் மனிதன் வீட்டு விலங்குகளைப் பெருக்கிக்கொண்டு வருகின்றான். கால் நடைகள் கோழி முதலிய வீட்டுப்



பறவைகள் முதலியவைகளைப் பண்ணைகளில் பெருக்குவதேயன்றி கடலிலுள்ள மீன் வகைகளையும் அரசியல் கட்டுப்பாடுகளின் மூலம் பெருக்கிக்கொண்டு வருகின்றான். இந்த வகையில் பாரதநாடு தவிர ஏனைய உலக பாகங்கள் முற்றிலும் உணவுக் கேள்விக்கு ஒருதீர்வு காணப்படுகின்றது.

6. இந்த வகையில் உலகமெங்கும் ஊன் உணவு பெருக்கப்பட்டுவர அது மானுடப் பெருக்கத்திற்கு வேண்டிய அளவு செய்யப்பட்டு வருகின்றதா? ‘இல்லை’ என்று கூறலாம். பண்டைக் காலம் முதற்கொண்டே வெப்ப நாடுகளிலும், சமவெப்பதட்ப நாடுகளிலும் ஊன் உணவு போதுமானதாய் இருக்கவில்லை. ஆகவே மானுட வளர்ச்சிக்கு வேண்டிய அளவுஉணவுப் பொருள்களைப் பெருக்கும் பொருட்டுத் தானியங்கள் முதலிய பயிர்களையும் காய்கறிகளையும் உண்டு பண்ணினார்கள். இந்த வகையில் உலகமெங்கும் உழவுத் தொழில் பெருக்கப்பட்டு நாட்டிலுள்ள எல்லாத் தொழில்களைக் காட்டிலும் அதுவே சிறந்த தொழில் ஆகிவிட்டது. கால் நடைகளை வளர்த்தல் இரண்டாந் தொழிலாகி அது மேய்ச்சல் தொழில் எனப்பட்டது. மான், பறவை, மீன் இவைகளைப் பிடிக்கும் வேட்டைத் தொழில் மூன்றாம் தரமாகிவிட்டது. ஆகவே தற்போதும் மானுட சமூகத்தைப் பெரும்பான்மையாக நிலைநிறுத்துவது உழவுத்தொழில் அல்லவா?

7. ஊன் உணவு கொள்ளுகிறவர்களும், தானியம், காய்கறி, கிழங்கு, கனி முதலியவைகளை உட்கொள்ளாமலிருப்பதில்லை. இவைகளில் பங்கு வீதம் மாறுபட்டிருக்கும். வெப்ப நாடுகளில் மரக்கறி மிகுதியாகவும், தட்ப நாடுகளில் ஊன் உணவு மிகுதியாகவும் இருக்கின்றது. இந்த வேறுபாடு விளைவைப் பொறுத்துத்தான் இருக்கிறதென்று அறியவேண்டும்.

8. ஊன் உணவை ஆதரித்துப் பேசுகிறவர்கள் மேலே காட்டிய உலகப் பழக்க வழக்கங்களை ஆதாரமாகக் கொண்டு பேசுகின்றார்கள். சிலர் சமய நூல்களும் இதனைத் தழுவி உரைத்திருக்கின்றன. விவிலிய நூலில் பழைய ஏற்பாட்டில் 5-ம் பகுதியில் மக்கள் ஒழுக வேண்டிய விவரங்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளை மோசே

என்ற நீதியாளர் தமது மக்களுக்கு வகுத்து வைத்தனராம். அவைகளில் பல பழக்க வழக்கங்களோடு உணவு வகைகளும் கூறப்பட்டுள்ளன. பிராணிகளிலே சில பிராணிகள் விலக்கப்பட்டும் சில ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருக்கின்றன. விலங்குகளிலே எருது, செம்மறி, வெள்ளாடு, மான் வகைகள். மலையாடு, முதலிய பத்துப் பிராணிகள் உண்ணலாமென்று கூறப்பட்டுள்ளன. மேலும் இரட்டைக் குளம்பு உள்ளதும், அசைபோடும்படியானதுமான விலங்குகள் உண்ணக் கூடியவையே. அசை போட்டும் ஒற்றைக் குளம்பு உள்ளதினால் ஒட்டை, முயல், கோனி என்பவைகள் உண்ணக் கூடாது. இரட்டைக் குளம்பு இருந்தும் அசை போடாத பன்றியை உண்ணக் கூடாது. நீர் வாழும் பிராணிகளில் சிறகும், சிதலும் உள்ளவைகளை உண்ணலாம். மற்றவைகள் தின்னக் கூடாது. பறவைகளில் சுத்தமானவைகளைத் தின்னலாம். அசுத்தமான கழுகு, வல்லூறு, பருந்து, காக்கை, தீக்குருவி, இராஜாளி, ஆந்தை, பெருங்கொக்கு, வௌவால் முதலியவைகளை தின்னக் கூடாது. சிறகிருந்தும், தத்துகிற பிராணிகள் கூடாது. மேலும், தானே இறந்த பிராணிகளை உட்கொள்ளாமல் பிறருக்கு விற்கலாம்.

மேலே கூறிய விதிகள் ஊன் உணவு பொருந்திய மட்டில் கட்டாயப் படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதிகளை இன்றைக்கும் யூதர்கள் தழுவி வருகிறார்கள்.

9. மற்ற நாடுகளில் வெவ்வேறு விதமான விதிகள் அனுசரித்து வரப்படுகின்றன. விவிலிய நூலைப் புனித நூலாக ஏற்றுக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள் அதில் விலக்கப் பட்டுள்ள சிலவற்றை உட்கொள்ளுகிறார்கள். உதாரணமாகப் பன்றியின் மாமிசம். மேலும் கிறிஸ்தவர்களில் சில நாட்களில் ஊன் உணவு விலக்கப்பட்டிருக்கின்றது. வெள்ளிக்கிழமைகள், நல்ல வெள்ளிக்கிழமைக்கு முன், 40–நாட்கள் (Lent) முதலிய நாட்களில் ஊன் உணவு கூடாது. புனித நாட்களில் அவ்வுணவு கூடாதென்றால் ஏனைய நாட்களில் ஊன் கூடுமோ விளங்கவில்லை. இதைப் போலவே ஏனைய சமயங்கள் சிலவற்றிலும் உண்டு.



10. நமது பாரத நாட்டில் உயர்ந்த வகுப்பார்களில் ஊன் உணவு விலக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பண்டைக் காலத்து ஆரியர்களிலும், சங்கக் காலத்துத் தமிழர்களிலும் ஊன் உணவு கொள்ளப்பட்டது. வட நாட்டில் அரசர்கள் வேள்வி செய்யும் வகையில் பசுக்களை வதைத்துத் தீயில் இட்டு உண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட பசுக்கள், ஆடு, குதிரை முதலியன. தென்னாட்டிலோ ஊர்த் தேவதை விழாக்களில் ஆடு, எருமை, பன்றி முதலிய முப்பலிகளை இட்டு வந்தார்கள் (சோழன் பூர்வ பட்டயம்). தற்காலத்தில் ஆடும் கோழியும் பலியிடுதலைக் கண்டுள்ளோம். இப்படியிருந்து வந்த கொள்கைகளை எதிர்த்துச் சித்தார்த்தரும் மகாவீரரும், 25–நூற்றாண்டுகளுக்கு முன் போராடினார்கள். அதன் விளைவாகத் தூய உணவு கொள்ளும் பழக்கம் நமது நாட்டில் தோன்றியது.

மனு முதலிய நூல்களில் போர் வீரர்களுக்கும் அரசர்களுக்கும் வேட்டையாடுதலும் ஊன் உண்ணலும் தள்ளப்படவில்லை. விவிலிய நூலைப்போல அவ்வுணவிற்கு ஒரு விலக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஐந்து நகங்கள் உள்ள பிராணிகளை அவர்களும் உண்ணக் கூடாதாம். இவ்வாறான விலக்குகள் ஆங்காங்கு இருக்கின்றன. வழக்கத்தில் சில நாள்களும் விலக்கப்பட்டிருக்கின்றன. திங்கள், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி, சஷ்டி, திரயோதசி, கிருத்திகை, திருவிழா நாட்களில் சைவர்களும், சனிக்கிழமை, புரட்டாசி, ஏகாதசி, அமாவாசை, திருவிழா நாட்களில் வைணவர்களும் ஊன் கொள்வதில்லை. தூய கொள்கைகள் உடைய சைவர்கள் தென்னாட்டிலும் வைணவர்கள் வடநாட்டிலும் எந்நாளிலும் ஊன் கொள்வதில்லை. இவ்வாறாகப் பலவகைப்பட்ட வழக்கங்கள் நமது நாட்டிலும் உள்ளன.

12. ஊன் உணவை ஆதரித்துப் பேசுகிறவர்கள் பால், தயிர், நெய் இவைகள் ஊன் அல்லவா? ஏன் அவைகள் கொள்ளப்படுகின்றன' என்று கேட்கிறார்கள். அவைகளில் உயிர் இல்லை எனறால் முட்டையில் உயிர் இல்லையே, அதை ஏன் கொள்ளக் கூடாது' என்று மீண்டும் கேட்கிறார்கள். இவ்வாறு கேட்கும் வாதிகள் உணவின் அடிப்படைக் காரணத்தை அறியாதிருக்கிறார்

கள். சமய வளர்ச்சிக்குத் தக்கபடி உணவும் பொருந்தியிருக்கவேண்டும். உணவுப் பொருள்கள் மூன்று வகைப்படும். 1. சாத்துவிகம், (மேலானது), 2. இராஜசம், (இடை), 3. தாமசம் (கடை) என்பன. இவைகளில் (1) சாத்துவிக உணவு, தூய்மையானது. ஊன் கலவாதது. மரக்கறிகளிலும் நாற்றம் முதலிய புகைச்சல் இல்லாதது. உதாரணம் (உள்ளி விலக்கு). இவ்விதம் சத்துவ உணவே சமய ஒழுக்கத்திற்குத் தகுதியானது (2) இராஜசம். போர்வீரர் முதலியோர்கள் உடல் வலிமைக்காக உண்பதே. மேலே கூறிய ஐந்து நகமுள்ளவை அவர்களுக்கு விலக்கு. (3) தாமதம், சமய நெறிக்குத் தகுதியற்றவை. தாழ்ந்த ஒழுக்க முடையவர்கள் பழக்கத்தினால் உண்பவை. இவ்வகை உணவை உயர்ந்த சமயிகள் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

சாத்துவிக உணவில் பயிர் வகைகள், இந்த மூலங்கள், பழ வர்க்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பால், தயிர், நெய் முதலியவைகள் ஊனில் தோன்றியவை ஆயினும் சாத்துவிகத்திற்கு உடன்பாடே. முட்டை உயிரற்றதாயிருப்பினும் பின்னால் உயிர் வரக்கூடியதாயிருப்பதால் அது உடன்பாடில்லை. இவ்விதமான பிரிவினை மக்களின் உயர்வை முன்னிட்டு விதிக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணத்தை எடுத்துக்காட்டின் மேலே சொன்ன தடைகள் ஏற்பட வழியில்லை. இந்த அடிப்படைக் காரணத்தை மறந்துவிட்டுப் பயிர்களுக்கும் உயிருண்டு. ஆகவே ஊனுணவு கொள்ளலாம் என்ற வாதம் சரியாகுமா? சாத்துவிக உணவே சைவ உணவு என்க.

---

## தலப்பகுதி

# திருவெருக்கத்தம் புலியூர்

1. இடம் :—தற்போது இந்த ஊர் இராஜேந்திர பட்டணம் என்று வழங்குகிறது. கூடல் ஐயாற்றூரிலிருந்து முட்டம் போகும் சாலையில் பத்துக்கல்லில் இந்த ஊர் இருக்கிறது. ஊர் சிறியது. கோவிலும் சுமாராகத் தானிருக்கும்.



2. கோவில் :—கோவில் பண்டையது. சிறிதாயிருந்த போதிலும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றது. கோவிலுக்குச் சேர்ந்த நிலங்கள் எல்லாம் பிறர் வசத்திலிருந்தன.

3. மூர்த்திகள் :—சுவாமி நீலகண்டர். தேவியார் நீலமலர்க் கண்ணியார். தலமரம் எருக்கு. இந்தக் காரணத்தினால் இவ்வூருக்கு எருக்கத்தம்புலியூர் என்று பெயர். புலியூர் பலவற்றிலும் இது ஒன்று.

4. ஐதீகம் :—இந்தத் தலம் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரின் பிறப்புத்தலம். நாயனார் எப்போதும் இறைவனிடத்தில் அன்பு பூண்டிருந்த வகையில் திருஞான சம்பந்தரின் புகழைக்கேட்டுத் தாமும் தன் மனைவியாரும் சீகாழிக்குச் சென்று சம்பந்தப் பெருமானைத் தெரிசித்தார்கள். சம்பந்தரின் ஆணைப்படி அவர் பாடும் பதிகங்களைத் தமது யாழில் இட்டு வாசித்துத் திருத்தொண்டு புரிந்து வந்தார்கள். திருநிலகண்டரின் அன்பு மிகுதியைக் கண்டமேல் வகுப்பார்களும் தக்க மரியாதை புரிந்து வந்தனர். யாழ்ப்பாண நாயனாரின் மற்ற வரலாற்றைப் பெரிய புராணத்தில் கண்டு கொள்க.

5. தற்போதைய பெயர் :—தற்போது கோயில் திருக்குமாரசாமி கோயில் என்று வழங்குகிறது. திருவெருக்கத்தம்புலியூர் என்ற பெயரே, திருக்குமாரசாமி கோயில் என்று மருவிவிட்டது. இக்கோயிலுக்குச் சம்பந்த சுவாமிகள் பாடிய பதிகம் ஒன்று உண்டு.

“ படையார் தருபூதப் பகடா ருரிபோர்வை
உடையா னுமையோடு முடனா யிடுகங்கைச்
சடையா னெருக்கத்தம் புலியூர்த் தருகோயில்
விடையா னடியேத்த மேவா வினைதானே ”

“ ஏரார் எருக்கத்தம் புலியூ ருறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா வருந்தமிழ் மாலை யிவைவல்லார்
பாரா ரவரேத்தப் பதிவா னுறை வாரே.”

இப்பதிகத்தைத் தவிர எருக்கத்தம்புலியூரைப் பற்றித் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணத்தில் சில

குறிப்புகள் உண்டு. மேலும் நாயனாரைப் பற்றிச் சம்பந்தர் புராணத்தில் 131-முதல் 144-வரையிலும், 444-முதல் 452-வரையிலும் வரலாறு கிடைக்கின்றது. நாயனாரின் மனைவியார் பெயர் மதங்க சூளாமணியார். தாயார் பிறப்பிடம் தருமபுரம். அதுதான் யாழ்மூரிப்பாடல் பெற்ற தலம்.

---

# சங்கற்ப நிராகரணம்

புலவர்-முருகவேள், B.O.L.

(முற்றொடர்ச்சி மலர் - 26 ; இதழ் 8 ; பக்கம் 364)

## 3. ஐக்கியவாதி சங்கற்பம்

இங்ஙனம் மாயாவாதியினை மேலே மறுத்துக் கூறிய (ஈசுர) ஐக்கியவாதி தன் கொள்கையினைக் கீழ்வருமாறு விளக்குகின்றான் : பதிபசுபாச உண்மைகளை உள்ளவாறு கூறலுறின், பதி என்று சொல்லப்படும் முதற்பொருளாகிய இறைவன் ஒருவனே ! பசுக்கள் எனப்படும் உயிர்களோ பலப்பலவாகும். பாசம் என்பது மாயை என்றும், கன்மம் என்றும் இரண்டு வகைப்படும்.

உலகிற்குத் தாயாக விளங்கும் இறைவன் தனது அருளால் உயிர்களுக்கு அவற்றின் நல்வினை தீவினைகளுக்கு ஏற்பப் பலவகை உடல்களை மாயையினின்று படைத்துக் கொடுப்பன். கரிய முகிலானது ஒளிமிக்க ஞாயிற்றின் பாற்சென்று சேர்ந்து அஞ்ஞாயிற்றின் கதிர்களையெல்லாம் மறைக்குந் தன்மைபோல - மாயையினின்று இறைவனால் தோற்றுவிக்கப் பெற்ற இவ்வுடல்களும், முதலில் தூயவாய் அறிவாய் இருந்த உயிர்களைச் சேர்ந்து எஞ்ஞான்றும் நீங்காமற் பொருந்தி, அவற்றின் தூய்மையையும் அறிவையும் மறைத்துவரும். உயிர்கள் முற்பிறவிகளிற் செய்த வினைப்பயன்களை, இறைவன் இவ்வுடல்களின் வாயிலாகவே உயிர்கள் நுகரும்படிச் செய்வான். நல்வினை தீவினை என்னும் இரண்டும் துலையொக்குமாறு, ஒரு பிறவியில் எல்லா வினைப்பயன்களும் நுகர்ந்து கழிந்தனவாகும்



வண்ணம், ஏதேனும் ஒரு சிறந்த சிவபுண்ணியம் உயிர்கள் திறத்தில் எதிர்ப்படுமாயின், உயிர்களுக்குச் ‘சத்திநிபாதம்’ என்பதொரு நிலை ஏற்படும்.

அந்நிலையில், இறைவன் தன் அருளால் திருமேனி கொண்டு ஞானாசிரியனாக வந்து, “ தானென்னை ஆட்கொண்டது எல்லாரும் தாமறிவார் ” “ பல்லோரும் காண என்றன் பசுபாசம் அறுத்தான் ” என்பன முதலாகச் சான்றோர்கள் திருவாய் மலர்ந்ததற் கியைய, உலகத்தார் எல்லோரும் காணும்படித் தகுதியுற்ற உயிர்களை ஆட்கொண்டு, அழுக்கு மிக்கிருக்கும் ஆடையை வெள்ளாவியில் இட்டு அழுக்ககற்றித் தூயதாக்கி வெண்மையுறச் செய்தவாறுபோல, தீக்கைகள் முதலியன செய்து அவற்றின் வாயிலாக உயிர்களின் பாசங்கள் முறையே கழியும் வண்ணம் சிறந்த ஞானப் பொருள்களைச் செவியறிவுறுப்பான்.

அதன் பயனாக, உயிர்கள் தமது குற்றங்கள் எல்லாம் நீங்கித் தூய்மையுற்று, நீரும் நீரும் கூடித் தம்மில் ஒன்றுசேர்ந்தாற் போல, இறையறிவும் உயிரறிவும் கூடி ஒன்றுசேர்ந்திலங்கும். இதனையே சிறந்த பெரியவர்கள் எல்லோரும் முத்திகள் பலவற்றினும் விழுமிய நல்ல முத்தி என்று சொல்லுவார்கள் எனத் தன் கொள்கைகளை ஐக்கியவாதி எடுத்துக் கூறினான். இவ் ஐக்கியவாதியின் கொள்கையினை,

“ இன்மைமலம், மாயைகன்மம் என்றிரண்டே, இறைதான்
இலங்கும்பல உயிர்களும்முன் புரிந்தஇரு வினையின்
தன்மைதனால் எவர்களுக்கும் தனுகரண புவனம்
தந்திடும்:இங் கிதனாலே இருபயனும் சார்ந்து
கன்மமெலாம் நேராக, நேர்தல் மருவக்
கடவுள் அருளால்எவையும் கழித்திடுவன்; அதனால்
பின்மலமா னவைஅணுகா; பெருகொளிமுன் புளதே
பெற்றிடும்என் றித்திறம்என் பேசுமாறே?”

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுள் திட்பநுட்பம் படத் தெளிவாகவும் சுருக்கமாகவும் அழகுறக் கூறியிருத்தல் ஈண்டு அறியற்பாலது.

## 4. ஐக்கியவாதி நிராகரணம்

என்றிங்ஙனம் ஐக்கியவாதி தன் சமயக் கொள்கைகளை எடுத்துக் கூற, அவனை அடுத்துப் பக்கத்தில் அமர்ந்திருந்த பாடாணவாதி எழுந்திருந்து, அவையிற்றை மறுத்துரைக்க முற்படுகின்றான் :

### கட்டுநிலை மறுப்பு

உயிர்கள் அநாதியிலே தூய்மையாகவும் அறிவாகவும் இருக்கும் என்றாய் ! அங்ஙனமாயின், அறிவாய்த் தூயவாயுள்ள உயிர்களைப் பாசங்கள் இடையே வந்து பொருந்துதற்கு ஏதும் வாயிலில்லை. மாயையினாலாகிய உடல் உயிர்களை வந்து பொருந்துமாயின், உயிர்களின் முன்னை நல்வினை தீவினைகளாகிய காரணங்களுக்கு ஏற்ப அன்றித் தானாகவே வந்து பொருந்த மாட்டாது. நல்வினை தீவினைகள் தாமும், ஓருடல் உளதாய் அதன்கண் அமைந்த மன மொழி மெய் என்னும் முக்கரணங்களால், உயிர்கள் செய்துகொள்ள உண்டாவனவன்றித் தாமே உண்டாக மாட்டா. ஆதலின், நீ கூறிய மாயை கன்மம் என்னும் இரண்டினுள்ளும் "விதை முன்னதோ பனைமுன்னதோ என்றாற்போல" உயிர்களை முன்னர்ப் பொருந்தியது எது ? மேலும், "உள்ளது போகாது இல்லது வாராது" என்பது சற்காரியவாதம் எனப் பெயர் பெறும் அறிவியல்நூல் முடிபுகளுள் ஒன்றாதலின், மாயை கன்மம் என்னும் பாசங்கள் உயிர்களின்பால் இடையே வந்து பொருந்துதற்குக் காரணமாக 'மலம்' என்பதொன்று உயிர்களின்மாட்டு முன்னரே இருந்ததாதல் வேண்டும் ! அங்ஙனம் மலம் என்பதொரு பொருளில்லை, மாயை கன்மம் என்னும் இரண்டு பாசங்கள் மட்டுமே தூய ஆடையில் அழுக்குப் படிந்தாற்போல, இடையே போந்து உயிர்களைச் சேர்ந்து நிற்கும் எனின்—காரணமின்றியே மாயை கன்மங்கள் இடையே போந்து உயிர்களைச் சேர்ந்து நிற்பின், கட்டுகள் நீங்கி வீடு பெற்றுள்ளார் மாட்டும் அவைகள் இடையே போந்து பொருந்துதல் வேண்டும் எனப்படும். அஃது இயைவதன்று !



அநாதியில் உன்னைவிட்டு நீங்காமல் நிற்கும் மலத்தொடர்பை இந்த மாயா கருவிகள் வந்து நீக்க, அக்கருவிகளைக் கொண்டு உன்னுடைய அறிவு 'சுவையொளியூறோசை நாற்றங்களை' அறிந்து வருவதனைக் கண்கூடாகக் கண்டுவைத்தும், மலம் என்பதொன்று இல்லை என்கின்றாய் ! அம்மட்டோ ! இவ்வுடலானது யாதொரு காரணமும் இன்றி இடையே போந்து இயைந்தது என்றனை ! அவ்வாறாயின், இவ்வுடம்பானது துயில்கின்றுழி, தன் அருகே ஒருபால் பாம்புகள் வந்து கிடப்பினும், ஒருபால் நவமணிகள் குவிந்துகிடப்பினும், அவற்றால் முறையே அச்சமும் ஆர்வமும் கொள்ளாமல் அறியாமை மிக்கிருப்பதென்னை ? உறக்கத்தின்கண் எல்லாப் பொறிகளும் நீங்கி இருத்தலின் விருப்பு வெறுப்புக்கள் தோன்றிற்றில எனின்—பொறி புலன் முதலிய கருவிகள் எல்லாம் ஒன்றும் குறைவின்றி நிறைந்து நின்று அறிவு நல்க, அறிவானது இவ்வுடலின்கண் நின்று சுவையொளியூறோசை நாற்றங்களை நுகர்ந்தறியும் நிலையிலும், நினைந்தும் மறந்தும் பிறழவுணர்ந்து தடுமாறியும் நிற்கும் நிலைகளுக்குக் காரணம் யாது ? இங்ஙனம் மயக்கம் நேர்தல் அறியாமை காரணமாக எனின்—"அறியாமை என நீ சொல்லியது மலம் என்பர் துணிந்துளோரே" எனப்படும்.

### வீட்டுநிலை மறுப்பு

ஆன்மா அறிவாகவே இருக்குமாயின், அது பின்னர் வேறு பிறிதோர் அறிவோடு சென்றுகூட வேண்டுவதில்லை. மேலும், வீடுபேற்று நிலையில் நீரும் நீரும் கூடினாற்போலப் பதியும் பசுவும் கூடி ஒளியாயிருக்கும் எனின்—இறைவன் முற்றறிவினன், உயிர் சிற்றறிவுடையது ; இறைவன் என்றும் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் ; உயிரோ ஒரு காலத்தில் ஓரிடத்தின் மட்டுமே இருத்தற்குரியது ; இறைவன் யலங்கள் இல்லாதவன், உயிர்கள் மலக்கட்டுடையன. எனவே, இறைவனையும் உயிர்களையும் ஒன்றாகிப்போம் என்று சொல்லுதல் அமையாது. பழமையாகத் தூய நிலையில் இருந்த உயிர்கள் தம்பால் எய்திய அழுக்குகள் நீங்கி, முத்தியில் சிவனோடு கூடி இன்பம் நுகரும் என்றாய் ! இந்த மாயா கன்மங்கள் கூடுதற்கு முன்பு உயிர் சிவனோடு

கூடி இன்பம் நுகர்ந்ததனைக் கண்டோமில்லை. ஆகலின், இறைவனும் உயிரும் 'நீரும் நீரும் போல' வீட்டுநிலையில் ஒன்றாய் ஒளியாயிருக்கும் என்றுரைக்கும் நின்னோடு, 'குடாகாய மகாகாய உவமை' கூறி நின்னால் மறுக்கப்பெற்ற மாயாவாதியிடை வேறுபாடு பெரிதும் இல்லை. 'சுற்றிப் போயும் சுங்கத்துறையில் வந்துகூடிய முறைமை' போலவே உன் செய்தியும் உளது! எனவே, திருவருளின் உண்மையை உணராத நீ அதனை யான் கூறக் கேட்பாயாக! எனப் பாடாணவாதி தன் கொள்கையினைக் கூறத் தொடங்குகின்றான்.

## சித்தியார் விளக்கம்

இப்பகுதியின்கண், 'மலமென ஒரு பொருளில்லை' என்ற ஐக்கியவாதியைப் பாடாணவாதி மறுத்துரைத்து ஆணவமலம் என்பதொன்று உண்டெனக் கூறிய கருத்தினை,

"மலமென வேறொன் றில்லை, மாயாகா ரியம தென்னின்-
இலகுயிர்க்கு இச்சா ஞானக் கிரியைகள் எழுப்பும் மாயை ;
விலகிடும் மலம்இ வற்றை ; வேறுமன் றதுவே றாகி
உலகுடல் காணம் ஆகி உதித்திடும் உணர்ந்து கொள்ளே!"

என்பது முதலிய பாடல்களாலும்; ஆணவ மலத்தின் இயல்பினை,

"ஒன்றதாய், அநேக சத்தி
உடையதாய், உடனாய், ஆதி
அன்றதாய், ஆன்மா வின்தன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று,போத் திருத்து வத்தை
நிகழ்த்திச்,செம் பினிற்க ளிம்பேய்ந்து
என்றும்அஞ் ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே!"

எனவரும் பாடலாலும்; 'நீரும் நீரும் போல' என்னும் உவமை கூறிய ஐக்கியவாதியின் கொள்கையினை மறுத்து, இறைவனோடு உயிர்களிடையுள்ள சாலப் பெரிய வேறுபாட்டினை,



"சிவன்சீவன் என்றிரண்டும் சித்து,ஒன்றாம் என்னில்
சிவனருட்சித்து, இவன்அருளைச் சேரும்சித்து; அவன்தான்
பவங்கெடு புத்திமுத்தி பண்ணும்சித்து, இவற்றிற்
படியும்சித்து, அறிவிக்கப் படும்சித்தும் இவன்தான் ;
அவன்தானே அறியும்சித்து, ஆகலினால் இரண்டும்
அணைந்தாலும் ஒன்றாகாது அசுந்தியமாய் இருக்கும் !
இவன்தானும் புத்தியும் சித்து, இவனோமோ புத்தி ?
இது அசித்தென் றிடில், அவனுக் கிவனும்அசித் தாமே."

"...உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக் குரியன்,
உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே!"

என்னும் பாடல்களாலும் சிவஞானத்தியார் தெளிவுற விளக்கிக் கூறியிருத்தல் ஈண்டறிந்து மகிழற்பாலது!

(தொடரும்)

---

கலைப்பகுதி

# நிலத்தின் தோற்றம்

### (ஓர் ஆங்கிலக் கட்டுரையின் சார்பு)

கடற்கரையிலோ, வெண்ணிலாவிலோ, மணல்வெளியிலோ, ஒருவன் தன்னந்தனியே அமர்ந்திருக்கும்போது இயற்கைச் செயல்களைப்பற்றி அவன் மனம் சிந்திக்குமல்லவா? 'இந்நிலம் எவ்வாறு தோன்றிற்று, எப்போது உதித்தது, இதன் எதிர்காலமென்ன' என்பதைப் பற்றி அவன் சிந்திப்பான் அன்றோ?

உலகம்தானே தோன்றிற்று, அதற்கு ஒரு முதலுமில்லை, இறுதியுமில்லை என்ற எண்ணம் அவனுக்கு வராது. எந்தச் சிறு பொருளைக் கண்டாலும் இதைச் செய்தவன் யார் என்ற ஒரு கேள்வி ஒருவன் மனதில் இயல்பாகவே எழுவது போல இத்தனைப் பெரிய நிலவுலகத்தை இயற்றினவன் ஒருவன் இருக்கமாட்டானா என்ற கேள்விதோன்றும். இந்தக் கேள்வியை முன்னிட்டுத்தான் நிலத்தின் தோற்றத்தைக் கூறவந்த விவிலிய நூல், "ஆதியில் கடவுள் வானத்தையும் நிலத்தையும் உண்டாக்கினார். நிலம் ஒரு

வடிவும் இல்லாமலிருந்தது. அது வெறுமையாக இருந்தது. உலகம் முழுவதும் இருள் சூழ்ந்திருந்தது" என்று எல்லாம் அந்நூல் தொடங்கி விரிக்கின்றது.

ஒவ்வொரு சமயமும் நிலத்தோற்றத்தைப்பற்றி உண்மையை அறிந்ததாகக் கூறும். தற்போதோ விஞ்ஞானக் கலை அதனை அறிய முயல்கிறது. முழுதும் அறியும் பொருட்டு அக்கலை முயன்று செல்லச் செல்ல இன்னும் அறியாதது மிக இருக்கின்றது என்று அது அறிந்துகொள்ளுகிறது.

மேல்நாட்டு வரலாற்று நூல்களில் காணுகிறபடி மனிதன் தான் தோன்றின காலத்தில்தான் இந்த நிலஉலகமும் தோன்றியிருக்கவேண்டுமென்று எண்ணியிருந்தான். அயர்லாந்து நாட்டில் இருந்த ஒரு பெரிய குருவானவர் விவிலிய நூலின்படி ஆராய்ச்சிகள் செய்து கி. பி. 1654ல் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிக்கையின்படி இந்த நிலவுலகம் கி. மு. 4004, அக்டோபர் 26, காலை 9-மணிக்குத் தோற்றுவிக்கப்பட்டதாம். அப்போது படித்தவர்கள்கூட அதனை நம்பினார்கள். அது முதல் ஒரு நூற்றாண்டுவரை அக்கொள்கையை எதிர்த்துப் பேசினவர்கள் சமய விரோதிகளென்று கொள்ளப்பட்டார்கள்.

ஆனால் 19-ம் நூற்றாண்டில் சில ஆராய்ச்சியாளர்கள் தோன்றிப் புவி நூல் என்ற ஒரு புதிய இயற்கலையை ஆராய்ந்தார்கள். மலைச் சரிவுகளை வெட்டிப்பார்த்ததில் பாறைகளில், கீறல் கீறலாகச் செதில்கள் போலப் பொறைகள் இருக்கக் கண்டார்கள். அந்தப் பொறைகளில் பண்டைக்காலத்துத் தாவரங்கள், உயிரின் உடல்கள் அடைபட்டிருக்கக் கண்டார்கள். மலை உச்சிகளில் திமிங்கிலத்தின் எலும்புகளும், இங்கிலாந்தில் பனைமரங்களும் அமெரிக்கக் கான்சாஸ் நாட்டில் கடற்படு பொருள்களும் ப்ரெஜில் தேசத்தில் எரிமலைச் சின்னங்களும் கண்டார்கள். இருக்க இயலாத இடங்களில் இவைகள் எப்படி இருந்தன என்று வியந்தார்கள். பிறகு கி. பி. 1758-ல் டார்வின் அறிஞர் கூர்தல் தத்துவத்தைப்பற்றி (evolution) ஓர் அரிய நூலை வெளியிட்டார். கல் எலும்புகளின் ஆராய்ச்சியினால் இவ்வுலகம் பலகோடி ஆண்டுகளுக்கு முன் இருந்து வந்திருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டது.



இப்படியிருக்க 1900 ஆண்டில் ஒளி வீச்சுத் தத்துவம் (Radiology) கண்டு பிடிக்கப்பட்டது. சில மூலப்பொருள்களில் ஒளிவீச்சுத் தன்மை தானே இயங்குகின்றது. அப்பொருள்கள் யுரேனியம், தோரியம், ரேடியம் என்பன. அவைகளிலிருந்து வீசும்ஒளி (Radio Activity) நாள் அடைவில் குறைந்து கொண்டேபோய் இறுதியில் காரீயம் போல ஆய்விடுகின்றது. இவ்வாறு ஒளிவீச்சு ஆனது முழுமையும் தேய்ந்து போக எத்தனைக் காலம் பிடிக்குமென்று விஞ்ஞானிகள் கணக்கிட முடியும். அவ்வாறு கணக்கிடும் பட்சத்தில் நிலவுலகத்தின் தோற்றம் எப்போது ஏற்பட்டதென்று கூறமுடியுமல்லவா?

உலகத்தில் வெவ்வேறு பகுதிகளில் உள்ள ஒளிவீச்சுப் பாறைகளை ஆராய்ந்து பார்த்ததில் இந்நில வுலகத்தின் மேல்பரப்பு கடினம் ஆனகாலம் 300 கோடி ஆண்டுகளுக்குமுன் என்பர். அதுபோலவே பெருங்கடலில் உள்ள உப்புக்கும், ஆறுகள் கடலில் செலுத்தும் உப்புக்கும் உள்ள அளவுவேறுபாடு வானவெளியில் தோன்றும் உடுக்களின் சுடர் இவைகளை எல்லாம் ஆராய்ச்சி செய்த அளவிலும் உலகத்தின் காலத்தை ஒருவாறு நிச்சயிக்கப்படும். அதாவது 200 கோடி முதல் 500 கோடி அளவில் உலக வடிவு ஏற்பட்டதென்பது அவ்வாராய்ச்சியின் முடிபு.

உலகம் எப்போது உண்டாக்கப்பட்டது என்பதை விட்டு, எவ்வாறு உண்டாக்கப்பட்டது என்று கேட்டால் விஞ்ஞானக்கலையும் திகைக்கிறது. வான நூலை ஆராய்ந்தால் 1000 கோடி ஒளி வருடங்களால் காலம் அளக்கப்படுமென்று காண்கிறோம். ஆனால் நமது பாதத்தின்கீழ் உள்ள நிலத்தின் தத்துவத்தை அறிய வகையில்லாமல் இருக்கிறோம். மனிதன் மண்எண்ணெய் எடுப்பதற்காக வியோமிங் (Wyoming) என்ற இடத்தில் தோண்டிய கிணறுதான் உலகத்திலேயே ஆழமானது. அதுவும் 20,521 அடிதான் சென்றிருக்கிறது. அதற்குக்கீழ் 1000 மடங்கு தோண்டிச் சென்றால்தான் நிலத்தின் மையத்தைக் காணமுடியும்.

ஆனால் ஒரு செய்தி நிச்சயம். நிலத்தின் அடியில் தாங்கமுடியாத சூடு உண்டு. சுரங்கங்களைத் தோண்டிச் செல்கையில் ஒவ்வொரு 60 அடி ஆழத்திற்கும் வெப்ப

மானது 1 டிகிரி ஏறுகின்றது. இந்தக் கணக்கில் இரண்டு கல் அளவு தோண்டிவிட்டால் தண்ணீர் கொதிக்கும்நிலை அடைகின்றது. முப்பது மைல் தோண்டினால் பாறைகள் கரையும்நிலை அதாவது 2200 டிகிரி சூடு ஏற்படுகின்றது. இந்த மட்டத்தில்தான் எரிமலை, குழம்பு தோன்றுகிறதாம். தற்காலத்தில் செய்த ஆராய்ச்சியைக் கொண்டு நிலத்தின் மேற்பகுதியில் உள்ள ஒளிவீச்சு மூலப்பொருள்களிலிருந்து சூடு வெளிவருகின்றதாம். ஆகவே நிலத்தின் மையத்தில் சூடானது 10,000 டிகிரி அதாவது சூரியனுடைய பரப்பில் தோன்றும் சூட்டின் அளவுதான் இருக்கக்கூடும் என்கின்றனர்.

விஞ்ஞானிகள் நிலவுலகத்தைப் பற்றி 3 படலங்களைக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். நிலத்தின் மேற்பரப்பில் காணும் பாறைகள் நடுமையம் வரை இருக்காது. அவ்வாறு இருப்பின் உலகத்தின் பளுவு பாதியாய்த்தான் இருக்கும். உலகின் மையத்தில் 4000 குறுக்களவு வரையில் உருகின இரும்பாக இருக்கவேண்டும். அணுக்களின் அழுத்தம் முதலான பண்புகளை ஆராயும்போது உலக மையத்தில் இருக்கும் உறைநீர்ப் பொருளின் தன்மையை முழுவதும் அறிய இயலாதவர்களாயிருக்கின்றோம்.

அவ்விதம் உறைநீர்ப் பகுதியைச் சுற்றி 2000 மைல் கனமுள்ள மற்றொரு பகுதியிருக்கின்றது. அதில் இரும்பு, மாக்னீசியம் ஸிலிகன் என்ற மூலப் பொருள்களால் ஆகிய பாறைகள் இருக்கக்கூடும். அவைகள் ஜவ்வுபோன்றும், வெண்மைச்சூடு கொண்டுமிருக்கும்.

அதற்குமேல் மனிதன் வாழும் இடம்மட்டும் பல பாறைகள் கொண்ட மேல்பகுதி தோன்றுகிறது. இது ஒரு பழத்தின் தோல்போல உள்ளது. இதன் கனம் 10 முதல் 20 மைல் ஆகும். அதில்தான் கரும்பாறைகள் முதலியன இருக்கின்றன.

இவ்வாறாக நிலத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்போது அருகிற் செல்லச் செல்லப் பளுவாகவும் சூடாகவும் ஏறிக்கொண்டே இருக்கக் காண்கின்றோம். இதைக் கொண்டு நிலஉலகமானது ஒரு காலத்தில் அனற்பிழம்பாக இருந்து நாளாவட்டத்தில் குளிர்ந்து வந்திருக்கவேண்டுமென்று ஆராயப்படுகின்றது.



நிலத்தைப்பற்றித் தற்போதுபரவியிருக்கும் கொள்கையானது, 1951-ம் ஆண்டில் சிகாகோ பல்கலைக் கழகத்துவான நூல் பேராசிரியர் (Kuiper) குய்ப்பர் வெளியிட்டது ஆகும். அதனை ஏனைய விஞ்ஞானிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். வானவெளியிலே அகண்ட வாயுக்களும், பெருத்த தூசிகளும் திரிந்துகொண்டிருந்தன. அவைகள் இழுப்புச் சக்தியினால் (Gravity) ஒன்று சேர்ந்து சுருங்கிச் சுற்றத் தலைப்பட்டன. அதனால் சூடுஏறி நெருப்புப் பிழம்புகளாகி உடுக்கள் ஆகித்தோன்றின.

இவ்வாறு சுற்றுகையில் சில இரண்டாகவும், மூன்றாகவும் பிளவுபட்டு இரட்டை உடுக்கள், முப்பட்டை உடுக்கள் போன்று தோன்றின. இவ்வாறு தோன்றிய உடுக்களில் நமது சூரியனும் ஒன்று. மற்ற உடுக்களைக் காட்டிலும் நமது சூரியன் அண்மையிலே தோன்றினவன். வாயுக்களாய் இருந்தவை, நெருப்புப் பிழம்புகளாகி அவற்றிலிருந்து பிரிந்தவைகள் கிரகங்கள் அல்லது நாள்களாகி நமது சூரியமண்டல மாயிற்று.

ஆகவே காலத்தின் தொடக்கத்தில் நமது பூமண்டலம் உருவமில்லாத ஒரு பெரிய பந்துபோல் இருந்தது. இழுப்புச் சக்தியினால் அதில் சூடேறிப் பளுவான பொருள்கள் மையத்திலும், லேசான பொருள்கள் மேல் பரப்பிலும் நிலைபெற்றன. நாளாவட்டத்தில் மேல்பரப்பு குளிரத் தொடங்கிற்று.

அந்தக் காலத்தில் மேல்பரப்பில் கண்டங்கள் தோன்றின. நெருப்பும் புகைச்சலும் பொருள்களை உமிழ்ந்தன. மெல்ல மெல்ல உறைநீர் கெட்டியாகிப் பாறைகள் தோன்றின.

இவ்விதம் கண்டங்கள் தோன்றினபோது எவ்வாறு உண்டாயின என்பதைப் பற்றி இரண்டு கொள்கைகள் உண்டு. தற்போது உள்ளதைப் போலவே ஆதியில் தோன்றிற்று என்பது ஒன்று. முந்தி தோன்றினது பிளவுபட்டு மிதந்து சென்றது என்பது இரண்டாவது. உலகப் படத்தைப் பார்த்தால் அமெரிக்காக்களின் கிழக்குக் கரையும் ஐரோப்பா, ஆப்ரிக்காக்களின் மேற்குக் கரையும் ஒன்று புணர்ந்திருக்கும் என்று தோன்றவில்லையா?

உலகத்தில் நிலப்பகுதி ஒழுங்குபட்ட பிறகு கடல்கள் உண்டாயின. பாறைகள் இறுகினதும் நீராவியும் கரிஅமிலமும் புகைந்து சென்று வாயுமண்டலம் ஆயின. அவைகள் கணக்கற்ற மேகத் தொகுதிகள் ஆகி நிலப்பரப்பைச் சுற்றி நின்று இரு மையம் ஆக்கிவிட்டன. சில சமயங்களில் உயர்ந்த பகுதிகளில் மழைபெய்யும். ஆனால் வெப்பத்தினால் அது நீராவி ஆக மாறிவிடும். இந்த இருட்டு மேகங்களின் உள்ளே சூரியஒளி ஆயிரம் ஆண்டுகள்வரை புகமுடியாமலிருக்கும். பிறகு ஒரு காலத்தில் விழுந்த மழையானது நீராவியாக மாறாமல் தண்ணீர் மயமாக நிலத்தில் நிற்கும். மேகங்களின் உருக்கம் குறையக் குறைய சூரிய கிரணம் பூமியின்மீது படர்ந்து கடல்கள் உண்டாவதற்குத் தொடக்கம் ஏற்பட்டது.

அப்போது நிலப்பரப்பின் வெப்பம் தணியத் தணிய அதன் மேல்பரப்பு உலர்ந்த கிச்சிலிப் பழம்போல் ஆகிவிட்டது. கிச்சிலிப்பழத்தின் தோலில் மேடும் பள்ளமும் இருப்பதைப்போல உலகில் மலைகளும் பள்ளத்தாக்குகளும் ஏற்பட்டன. இவ்வாறு ஏற்படுவதற்குக் கணக்கற்ற ஆண்டுகள் சென்றன. மழை, வெள்ளம், மலை உச்சிகளைக் கரைத்துக்கொண்டுபோய் ஆறுகளாக ஓடிக் கடல்களை நிரப்பின. ஒரு காலத்தில் சமமாக இருந்த நிலங்கள் நிலத்தின் குமுறல்களாய்ப் புது மலைகளாக ஏற்பட்டன.

நூறுகோடி ஆண்டுகளுக்கு முன் கானடா பிராந்தியத்தில் இவ்விதமான மலைகள் தோன்றியிருக்கக் கூடும். 20-கோடி ஆண்டுகளின் முன் அமெரிக்காவில் அபலாச்சியின் மலைத்தொடர் தோன்றியிருக்கக் கூடும்.

நாம் இப்போது இருக்கும் காலத்தில்கூடப் புது மலைகள் தோன்றுகின்றன என்று கூறலாம். தற்போது உலகப் பெருமலைகளான இமாலயம், இராக்கி, ஆல்ப்ஸ், ஆண்டிஸ், மலைத்தொடர்கள், ஆறுகோடி ஆண்டுகளுக்கு முன்தான் தோன்றினவாம். மிகச் சமீபத்தில் தோன்றிய மலைகள் வட அமெரிக்காவில் மேற்குக் கரையில் உள்ளவை. அவைகள் 10-லட்சம் ஆண்டுகளுக்கு முன் வெடித்த எரிமலைகளால் உண்டாயின. பசுபிக் சமுத்திரத்தின் வடகரையின் ஓரமாக எரிமலைகள் நெருப்புகளைக் கக்கிக்கொண்டிருந்தன. தற்போதும் இமயம் முதலியவைகள் இன்னும் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. இப்படிப்பட்ட குமுறல்கள் இடையில்தான் மானிடவர்க்கமும் தோன்றிற்று எனலாம்.



அளவு கடந்த உறைபனி ஆறுகள் சென்ற 10-லட்சம் ஆண்டுகளுக்குள் பெருகியும் குறைந்தும் போயிருக்கின்றன. இருபதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் இறுதி முறையாக அவ்வாறுகள் படர்ந்தன. தற்போதும் நிலப்பரப்பில் பத்தில் ஒரு பங்கு பனிக்குள் உறைந்து கிடக்கின்றது. பச்சைப் பிரதேசம் (Greenland) தென் துருவகண்டம் (Antartic) என்பவைகள் 50-லட்சம் கனமைல் கொண்ட பனிக்கட்டிக்குள் ஆழ்ந்திருக்கின்றன. சென்ற இருநூறு ஆண்டுகளுக்குள்ளாக அப்பனி மயமானது பின்வாங்கிக் கொண்டிருக்கின்றது. சுவிட்சர்லாந்து நாட்டில் சில உணவுப் பவனங்கள் பனியால் மூடப்பட்ட குன்றுக் காட்சிகளுக்கு எதிரே கட்டப்பட்டிருந்தன. இப்போது அம்மூடுபனி அங்கு இல்லை. வடதுருவம், தென் துருவங்களில் பனி மலைகள் பின் வாங்குகின்றன. விஞ்ஞானிகள் கணக்கிட்டபடி நிலத்தின் வெட்ப தட்ப நிலை கி. பி. 20 ஆயிரம் ஆண்டு வரை சூடு ஏறிக்கொண்டுபோகும். பிறகு கி. பி. 50-ஆயிரம் ஆண்டில் அடுத்த பனிப்பருவம் தொடங்கும். அவ்வாறு சூடு ஏறிக்கொள்வதால் தற்போதிருக்கும் பனிக்கட்டிகள் கரைந்து கடலின் மட்டம் 100-அடி உயர்ந்துவிடும். அப்படியானால் கடற்கரையில் உள்ள நியூயார்க், லண்டன், பாரிஸ் முதலிய பெரும்பட்டணங்கள் கடலுக்குள் அமிழ்ந்துவிடும்.

தோன்றியிருக்கும் உலகமானது கால அளவையில் ஒரு குத்துப்புள்ளி போன்றது. மனிதனுடைய பிழைப்புக் காலமும் பூமியின் காலத்தில் சின்னஞ் சிறு பகுதிதான். அளவற்ற எதிர்காலத்தில் எத்தனை முறை இச்சம்பவங்கள் திரும்பி வருமென்று கூறமுடியாது. ஒவ்வொரு நாளும் மழைகளும் ஆறுகளும் 80-லட்சம் டன் நிறையுள்ள வண்டல்களைக் கடலுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. நாளா வட்டத்தில் மிகப்பெரிய சிகரங்கள் பொடியாய்ப் போகும். ஆனாலோ புதுச்சிகரங்கள் கிளம்பிவிடும். மனிதனுடைய குறுகிய வாழ்நாளை எண்ணிப்பார்த்தால் இவ்வித

மான நீண்ட மாறுதல்கள் அவன் பார்வைக்கு எதிர்ப்படுமா என்பதுதான் கேள்வி.

நமது நில உலகமோ இன்னும் இளமையானது. நமது சூரிய மண்டலம் இருக்கும் வரை அதுவும் இருக்கும். நமது சூரியனே ஓர் இளைய தாரகை. அதனுடைய ஆற்றல் ஆயிரம் கோடி ஆண்டுகள் வரை இருக்கக் கூடியது. இப்படிப்பட்ட சூரியன் ஒரு காலத்தில் அவிந்த சாம்பலாகப் போவானென்றும் நிலத்தில் இருக்கும் உயிர்கள் குளிருக்குள் அழிவார்கள் என்றும் வான நூலோர்கள் எண்ணினார்கள். ஆனால் தற்போதோ தாரகைகள் அத்தனை எளிதிலும் அமைதியோடும் அழிந்து போவதில்லையென்றும், நிலவுலகம் மீண்டும் மூலப்பிழம்பில் சேர்ந்துவிடும் என்றும் கூறுகின்றார்கள்.

ஐயாயிரம் கோடி ஆண்டுகளுக்குப்பின் சூரியனுக்கு ஒளிதரும் ஜலவாயு (Hydrogen) தாழ்ச்சி பெற்று அதனால் மற்றப் பொருள்களுக்கு வேகமுண்டாகிச் சூரியன் மீண்டும் அதிக ஒளியும் வெப்பமும் பெறக்கூடும் என்கின்றனர். மெல்ல மெல்ல நிலத்தின் வெப்பமும் ஏற்றமடைந்து கடல்கள் கொதித்துப்போகும். நாளாவட்டத்தில் பூவுலகம் சூரியனில் ஒட்டிக்கொள்ளும்.

அவ்விதம் ஆகும்போது சூரியனுடைய வடிவு தாங்க முடியாமல் பிளவுபட்டு முப்பது கோளங்களாகி வெடிக்கும்.

அப்படிப்பட்ட துர் அதிர்ஷ்ட நாள் வந்தால் சூரியனிலிருந்து நினைக்கவொண்ணா வேகத்தில் நெருப்புப் பிழம்புகள் கக்கப்படும். அவைகள் புறப்பட்ட 8 நிமிஷ நேரத்தில் நிலவுலகம் அக்கிரணங்களால் சூழப்படும். இரண்டு நாள்களுக்குள் பாறைகள் எல்லாம உருகிப்போய் இந்நிலவுலகம் ஒரே நெருப்புப் பிழம்பாகிவிடும். இந்த பயங்கரமான இறுதி நிலையை விவிலிய நூலும் எடுத்துக்காட்டியிருக்கின்றது. ''நான்காவது தேவ தூதன் சூரியன் பேரில் இரசாயனத்தை ஊற்றினான். அதில் தோன்றிய அபரிமிதமான வெப்பத்தில் மனிதன் கரைந்துபோனான். நகரங்கள் அழிந்தன. தீவுகள் மாய்ந்தன. மலைகள் காணப்படமாட்டா'' என்பதே.



இதுவரை கூறிய கட்டுரையைச் சிறிது ஆராய்ந்து பாருங்கள். இதனால் உலகத்தின் தோற்றமும் அழிவும் எவ்வாறு ஏற்பட்டன என்று விவரிக்கப்பட்டுள்ளது. விவிலிய நூல், ஒருவாறு விவரிக்கத் தற்கால விஞ்ஞானம் ஒருவாறு கூறும். கால அளவை கணக்கற்ற மடங்கு மாறியுள்ளது. தோற்றத்தினுடைய தன்மையும் மாறுபட்டுள்ளது.

சைவ சித்தாந்தத்தின்படி நிலவுலகம் பாசத்தின் ஒரு கூறு ஆகும். அது மூலப் பிரகிருதியின் தோற்றம். அது உள்ள பொருள் மாறுதல் அடையுமே தவிர அழிதல் கிடையாது. ஆகவே இதனை விஞ்ஞான அறிவு ஒரு சிறிதேனும் மாற்றிவிட்டதா என்பதை ஆராயுங்கள்.

---

# பிறப்புநாள் வாழ்த்துக் கூட்டம்

(சூ. குற்றாலலிங்கம் பிள்ளை)

தூத்துக்குடி சித்தாந்தப்பேராசிரியர் - சித்தாந்த முதுபெரும் புலவர் - திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்களின் எணைபத்தோராம் ஆண்டுப் பிறப்பு நாளாகிய சென்ற ஆடித் திங்கள் 27-ம் நாள் 11-8-53 செவ்வாய்க்கிழமையன்று கீழ்க்கண்டவாறு கொண்டாடப் பெற்றது.

அன்று மாலை 6-மணிக்கு அன்பர்களுடன் சிவாலய வழிபாடு செய்யப் பெற்றது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் தேவார பாடசாலை மாணவர்கள் மாணவிகள் திருமுறை ஓதுதலுடன் பேராசிரியரவர்கள் திருஞான சம்பந்த சுவாமிகள் மடாலயத்துக்கு அழைத்துச் செல்லப்பெற்றார். மடாலயம் மாலைகளாலும், மின்னொளி விளக்குகளாலும் நன்கு அணிசெய்யப் பெற்றிருந்தது. திரளாக ஆடவர்களும் மகளிரும் குழுமியிருந்தார்கள். வெளியூரினின்றும் சில அன்பர்கள் போந்திருந்தார்கள்.

மாலை 7-மணிக்குக் கொண்டாட்டப் பேரவை தொடங்கப் பெற்றது. சைவ சித்தாந்த சபைத் தலைவர் திரு. சிவ. ந. சின்னகண்ணுப் பிள்ளையவர்கள், பி.ஏ., பி.எல். பேரவைக்குத் தலைமை தாங்க, சப் கோர்ட்டு நீதிபதி திரு. எஸ். மகா

ராச பிள்ளை, பி.எஸ்சி.பி.எல். அவர்களை வேண்டிக்கொண்டார்கள். அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைமை மூன்னுரையாகச் சித்தாந்தப் பேராசிரியரவர்கள் இருபதாவது வயதுமுதல் முதுமைப்பருவமுற்ற இந்நாள்வரை அறுபதாண்டுகளாகச் சைவத்துக்கும், செந்தமிழுக்கும் தொடர்ந்து சலியாது தொண்டு செய்து வருகின்றார்கள் என்றும், இத்தகைய தன்னலமற்ற தொண்டு செய்துவரும் அவர்களைப் போற்றவேண்டியதும் பாராட்டவேண்டியதும் நமது கடமை என்றும் மொழிந்துள்ளார்கள். பின்னர் திருவாளர்கள் டிஸ்ட்டிரிக்டு முன்சிப் ஆவுடைநாயகம் பிள்ளையவர்கள், பி.ஏ.பி. எல். நகரமன்ற ஆணையாளர் வேதாசலம் பிள்ளையவர்கள், பி.ஏ.பி.எல்.,ஏ.சி. பால் நாடார் அவர்கள் பி.ஏ.பி.எல்., கார்வார் பி. சுப்பையா பிள்ளையவர்கள் பொது மக்களின் சார்பாகப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்கள். புலவர்களின் சார்பாக வ.உ.சி. கல்லூரித் தலைமைத்தமிழ்ப் பேராசிரியர் திரு. கு. சிவராமகிருஷ்ணன் அவர்களும், திரு. மறை. திருநாவுக்கரசனார் அவர்களும் வாழ்த்துக் கூறினார்கள். வெளியூர் அன்பர்களின் சார்பாகத் திருச்செந்தூர்த் திருக்கோயில் ஆணையாளர் திரு. எம். ஆர். சண்முகசுந்தரம்பிள்ளை, பி.ஏ.பி.எல். அவர்களும், திருநெல்வேலித் தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக மானேஜிங் டைரெக்டர் திரு. வ. சுப்பையாபிள்ளையவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். மேற்படி கழகப் பண்டிதர் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த சங்க வாழ்த்துரையைப் படித்துக் கொடுத்தார்கள். இந்நகர்ச் சேக்கிழார் கழகத்தின் சார்பாகத் திரு. சி. ஈ. நாயகம் பிள்ளை, பி. ஏ. அவர்களும், பாகம்பிரியாள் மாதர் கழகச் சார்பாகத் திருமதி. ச. சிவகாமி அம்மையாரும், திலகவதியார் கழகச் சார்பாகத் திருமதி. வள்ளிநாயகியம்மையாரும் பாராட்டுரைகள் பகர்ந்தார்கள்.

சைவ சித்தாந்த சபையின் துணையமைச்சர் திரு. கு. குற்றாலலிங்கம் பிள்ளையவர்கள் தருமபுரம், மதுரை, திருப்பனந்தாள், பெருங்குளம் சைவாதீனங்களினின்றும் வந்த நல்லாசித் திருமுகங்களையும், வெளியூர்ச் சபைகளும் அன்பர்களும் அனுப்பியுள்ள வாழ்த்துப் பாக்களையும், வாழ்த்துச் செய்திகளையும் படித்தார்கள்.



பின்னர்ச் சித்தாந்தப் பேராசிரியரவர்கள் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தமது சமயத்துக்கும், மொழிக்கும், நாட்டுக்கும் தொண்டாற்றவேண்டிய கடப்பாடுடையராதலின் அக்கடமையின்படி தான் செய்துவரும் சிறு தொண்டுகளைப் பாராட்டி வாழ்த்துரை வழங்குவதற்காக இப்பேரவையைக் கூட்டிய சைவ சித்தாந்த சபையாருக்கும், தலைமை தாங்கிய நீதிபதியவர்கட்கும் நன்றி செலுத்தினார்கள். மேலும் தமக்கு நல்லாசியும் திருவருட்பிரசாதமும் அனுப்பிய சைவாதீனகர்த்தர்கட்கு வணக்கமும், வாழ்த்துரைகள் வழங்கிய உள்ளூர் வெளியூர் அன்பர்கட்கு நன்றியும் செலுத்தினார்கள்.

பேரவைத் தலைவரவர்களின் முடிப்புரைக்குப் பின் வழக்கறிஞர் திரு. இ. வெண்ணிமாலைப் பிள்ளையவர்கள், பி.ஏ.பி.எல். தலைவர்கட்கும் மற்றும் எல்லா அன்பர்கட்கும் நன்றி கூறினார்கள்.

மடாலயத்தில் வழிபாடு செய்யப்பெற்றுப் பேராசிரியா அவர்களால் அனைவருக்கும் திருநீறு வழங்கப் பெற்றது.

---

# தலைமையுரையில் சிறந்த பகுதிகள்

**திருமதி. பிருந்தாதேவி அம்மையார்**

(மலர் - 26 ; இதழ் - 8 ; 382-ம் பக்கத்தொடர்ச்சி)

நெஞ்சம் போய்யாமை :—" மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டாம் " என்பர் சித்தர் ! மனங் குரங்காயிற்றே ; தாவிக்கொண்டே இருத்தலன்றோ அதனியல்பு ! ஒன்றைவிட்டொன்று பற்றிப் பாசக்கடலுள் வீழ்வதன்றோ அதன் விருப்பு ! " நினைப்பே பிறப்பு " என்பது ஆன்றோர் அறிந்தது ! நினைப்புப் பிறப்பாயின் இறைவனைப் பற்றிய நினைப்பிலே நெஞ்சத்தைச் செலுத்தினால் பாசவலை பின்னப் படாதல்லவா ?

“ நெஞ்சகமே கோயி னினைவே சுகந்தமன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே ”

என்னும் தாயுமானார் பாடலும், “ உள்ளம் பெருங் கோயில் ” எனவரும் மந்திர மொழியும் நெஞ்சத்தில் நின்றால், இதுவே நினைப்பானால் கள்ளம் பிறக்க இடமில்லை ! “ ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந் தேடியுங் கண்டேன் சிவன்பெருந் தன்மையை ” எனப் பத்தாந்திருமுறையும், “ வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே” எனத் திருவாசகமும் தெரிவிக்கின்றபடி, ஆடிப்பாடி, அழுது, தொழுது, நெஞ்சத்தைத் திருத்தல் வேண்டும் !

தன்னைத்தானே சிந்தித்துணர்தல்வேண்டும் ! “தன்னை அறியார் தலைவன் தனையறியார் ” என்பது முற்றிலும் உண்மை.

“ தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியுமறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே ”

தன்னையறிந்தபின் பேசாஅனுபூதி பிறக்கும்! தன்னைத் தானறியாமல் - தலைவனையுந் தானறியாமல் காலம் பல கழிவது கழிவிரக்கங்கொள்ளத் தக்கதன்றோ ? ஈசன் அருளன்றி மற்றவெல்லாம் அநித்தியம் என்பதை நெஞ்சம் உணர்தல் வேண்டும் ! இறைவன் பாதமலரைச் சூடாத நெஞ்சைக் கண்டித்துக் கூறுகின்றார் மாணிக்கவாசகர் !

“ ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை ” எனவரும் பாடலில், “ அவனைத் தவிர எனக்குத் துணை வேறில்லை. அதை நீ அறியாமல் உழலுகின்றனையே ” என இடித்துக் கூறவே, “ துணையிலிபிண நெஞ்சே ” என்றார் !

“ பாடவேண்டு நான் போற்றி நின்னையே......வீடுதந் தருளு போற்றி நின்மெய்யர் மெய்யனே !” என்ற பாடலில் உள்ளம் நைந்துருகி, உற்ற ஒன்றைப் பற்றின், வேண்டுதல் பலிதமாகும் ! நினைத்தவை நிறைவேறும் ! நாயன்மார்களும், சமயாசாரியார்களும் உள்ளம் உருகி உருகி உணர்வு ஒன்றிய இறையடிப் பேற்றை எய்தியுள்ளனர் !



காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நின்றோதினர் திருவைந்தெழுத்தை ! நற்றவனை மறந்தபொழுதும் நாச் சொல்லியது திருவைந்தெழுத்தை ! கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சிய பொழுதும் நற்றுணையாகப்பற்றினர் திருவைந்தெழுத்தை !

“ உலகவாழ்வு பொய்யென உணராதபோது மெய்யாகத் தோன்றும்,” எது மெய்யானதோ, எது நிலைத்ததோ அது “ அவனருள் ” என்பதை நெஞ்சம் உணர்ந்தால் பொய்மறையும் !

அன்பும் - அருளும் :—அன்பே சிவம், அன்பு வேறல்ல சிவம்வேறல்ல. நோக்குவார் தங்கருத்தில் நுண்ணுணர்வு ஏற்படுத்தக்கூடிய இரண்டும் ஒன்றே !

அன்பே சிவமாய் அமர்ந்திருந்து மெய்யுணர் வின்பங் கண்டவருக்குச் சத்தென்னும் மெய்யும், சித்தென்னும் உணர்வும், ஆனந்தமென்னும் இன்பமும் தாமே வந்தடையும் !

“ சித்தமல மறவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே ”

என்று அத்தன் அன்பு காரணமாக அருளிய இன்பத்தை எக்களிப்புடன் பாடுகிறார் மாணிக்கவாசகர் ! உள்ளுணர்வோடு கூடிய அன்பைக் கொண்ட அடியார்க்கு ஈசன் அருளைத்தர முன்னிற்பன் !

“ அன்று சிறுத் தொண்டரிடும் பிள்ளைக்கறியமுதும்
மென்று சுவைதெரிந்த வேடனிட்ட ஊனும்போல்
நன்று நரையாட்டியிடு பிட்டுநயக் தருந்தி
என்று மடியார்க் கெளிவந்தா யெந்தாயே”

என்ற திருவிளையாடற் புராணச் செய்யுள், சிறுத்தொண்ட நாயனார் இட்ட பிள்ளைக்கறியமுதினையும், கண்ணப்பர் சுவை தெரிந்தூட்டிய ஊனமுதினையும், நரை மூதியாளாகிய வந்தி யிட்ட பிட்டினையும், பெரிதும் விரும்பி நுகர்ந்த எந்தையே இப்படிப் பல செயல்கள் செய்து அடியார் அன்பின் திறத்தில் எளியனாயினாய் எனக்கூறுவது

அன்பின் மகிமையையும், அருளின் வல்லமையையும் தெளிவுறுத்துகின்றது !

“ எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்
கிங்கே யென்றருள் புரியுமெம் பெருமான் ”

என்று ஆளுடைப்பிள்ளையார் கூறும் அருள் மொழி திருவாசகத்தாலும் தெளிவாக்கப்படுகிறது. இறைவன் அருட்கண்ணால் நோக்க அதனாற்றரிசித்தலை, “கண்ணுதலான்றன் கருணைக்கண் காட்ட வந்தெய்தி எண்ணுதற்கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி ” யென்ற அடிகள் நினைவில் நின்று இன்பம் நல்குகின்றன ; அன்பால் உருகுவார்க்கன்றி அன்பிலாது பூசையும், தவமும் புரிவார்க்கு இறைவன் அருளான் !

“ என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்த வொண்ணாதே ”

உணர்வு கொண்ட உயிருக்கு இயற்கையிலே அன்பு அமைதல் வேண்டும் !

* * *

இன்றைய நவநாகரிக காலத்திலே தோன்றும் விஞ்ஞான உண்மைகள் அனைத்தையும் அன்றே நம் முன்னோர் கண்டனர் ! தமிழன் செயல் முறையில் சாத்திரத்தைப் பயன்படுத்தியிருந்தால் உலகியல் நலன் முழுதும் அடைந்திருப்பான் என்பது உறுதி !

மொழியும் - மறையும் : ஏனைய மொழிகளில் இல்லாத தனிச்சுவை நம் தமிழ் மொழிக்குண்டு ! இலக்கிய நயம், இலக்கண வரம்பு, இவையனைத்தையும் விட அருட்பாசுரங்கள், தமிழ்மொழியில் இருப்பதுபோல் வேறெம் மொழியிலும் இல்லை ! உலகம் புகழும் ஆங்கிலத்திலே இனிமை, எளிமை, அருமை, இலக்கிய நயம் இவைகளிருப்பினும், நம் மொழியில் இருக்கும் அருள் தன்மை பொருந்திய நூல்களை அதில் காண்டலரிது ! இலக்கியங்களுக்கு இலக்காக இராமகாவியமும், கற்புக்கு அணியாகக் கண்ணகி கதையும், சட்டத்தை-நீதியைத் திட்டமாக விளக்



கும் வள்ளுவர் வாய்மொழியும், அருட்டிறத்தை அருமையாகப் புலப்படுத்தும் தேவாரம், திருவாசகம், மெய்கண்ட நூல்களும் மொழியின் பெருமையை, அருளின் வல்லமையைக் காட்டுகின்றன ! இத்தனை நலன்களும் ஒத்திசைந்த மொழி, வேறெம்மொழியாக இருக்கமுடியும் ? நம் மொழியில் மறையுண்டு, மாண்புண்டு, மக்கள் மன எழுச்சியும் திட்டமான அயரா முயற்சியும் கொண்டால் நமது கலைகள் வையகமெங்கும் பரவி உய்ய வழிபிறக்கும் !

சைவமும் பெண்களும் : மக்களுக்கு என்று அறிவும் உணர்வும் ஏற்பட்டதோ அன்றே சமயமும் தோன்றியது ! உலகமெங்கும் சமயக்கொள்கைகள் ; அறிவு, உணர்வு நிலைகளுக்கேற்ற வகையிலே தோன்றி நாளும் வளர்ந்தன ! “ சமயம் என்பது புதுமையான, அல்லது புறத்திலிருந்து கொண்டுவந்து சேர்க்கப்பட்டதொரு பொருளன்று ! அது நம் லௌகிக வாழ்க்கை நல்வழியில் நடைபெறத் தூண்டுமொரு சக்தி ! என்றுமுள பரம்பொருள் இம் மண்ணுலகின் மூலமாக விடுகின்ற மூச்சு.” இது, Henry Drummond கருத்து !

தமிழகத்திலே தோன்றி வளர்ந்த சமயம் சைவசித்தாந்த சமயம் ! இச்சமயம் காலத்தொடுபடாத பழமையை உடையது ! ஆண்மக்களைப் போன்று பெண்மக்களும் சைவசமயத்திலே பற்றுக்கொண்டு இதன் வளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர் !

* * *

அறுபத்து மூன்று நாயன்மார்களிலே மூவர் பெண்கள். ஆண்கள் அறுபதின்மருடன், மூன்று பெண் திலகங்கள் ஒப்பிடக்கூடிய பெருமை பெற்றவர்கள். ஏனைய பெரியபுராணப் பெண்மணிகள் அனைவரும், கணவர் சொற்களைக் கடைப்பிடித்துக் கணவன்மார்களைத் தம் ஒத்துழைப்பால் சிவப்பேறு எய்தும் வழி செய்தனர். அன்று வளர்ந்த சைவத்தொண்டு நாளும் பெருகியிருப்பின் இன்று சைவம் உலகெலாம் பரவியிருக்கும். இடையே கடவுட்கொள்கை சிறிது நழுவப் பின்னர் தலைதூக்க ஒருவாறுகச் சமயம் இன்றுவரை நிலைத்திருக்கிறது.

சைவம் தழைக்க வேண்டுமாயின், சைவப் பெண்மணிகளின் உழைப்பு, ஊக்கம், ஆக்கம் மிகத்தேவை. மன்ன

னைத் திருத்திய மங்கையும், தம்பியை உண்மை உணரும்படி செய்த திலகவதியும், கணவனால் வணங்கப்பட்டு இறைவனால் "அம்மை"யென அழைக்கப்பட்ட அம்மையாரும் பெண் மணிகளன்றோ? நாமும் பெண்கள்தாமே!

எதிர்காலப் பணி: நம்மிடையே ஒரு உயர்ந்த உணர்ச்சி, சிறந்த பண்பாடு, ஒழுக்கத்தை ஓம்பும் கடவுட் பற்று, சைவாகம ஒழுக்கம், சாத்திரப் புலமை இவைகள் வளரவேண்டும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற வழியிலே செயலாற்றுபவர்கள் நாம். தன்னலன் பேணாத் தகைமையாளர் நாம். நமக்கெனச் செயலில்லை:

" அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து!"

என்பதுபோல எங்கும் உள்ளவன் இறைவன். நம் செயல் இறைவனையே சாரும். நம் செயல் இறைவனைச் சாரும் பொழுது நாம் செய்தல் நல்லனவாகவன்றோ இருத்தல் வேண்டும். நமக்கு முன்னே பலவிதப் பணிகள் குவிந்து கிடக்கின்றன. இன்றைய நாட்களில் உலகிடைக் கடவுட் பற்று அருகி வருகிறது. பெண்ணுக்கு உலகம் இரங்கும். நாம் அடக்கமாக - ஆனால் ஆக்கம் நிறைந்த வேலைகள் பல செய்து மக்களை விழிப்படையச் செய்யவேண்டும். பெண் மணிகள் அனைவரும், மூலையில் உறங்குவோர் பலரும் வெளிவரவேண்டும். சாத்திரப் புலமையோடு மற்ற மக்களையும் சைவஉணர்வு கொள்ளச் செய்து கடவுட்பற்றைப் பெருக்கவேண்டும். இதற்குப் "பாகம்பிரியாள் மாதர் கழகம்" போன்ற அருட் கழகங்கள் ஆக்கவேலைகள் பலவற்றில் ஊக்கம் செலுத்த வேண்டும். ஆண்களில் பலர் பிரசாரம் செய்ய இருக்கின்றனர். ஆயின் பெண்களோ விரல்விட்டு எண்ணக்கூடிய நிலையிலிருக்கிறோம். சாத்திரம் படிப்பதென்றால் வேப்பங்காயா? உள் உணரின் தித்திக்குமே.

மங்கையர் திலகங்களே! திரண்டு வாரீர்!! தெய்வ சந்நிதியிலே ஓர் உறுதி செய்வோம்; நாம் உழைக்கப் பிறந்தவர்கள் உலகிற்கு உழைப்போம்; உண்மையைக் காப்போம்! இதைவிட வேறெது இன்பம்.

## மதிப்புரை

1. தென்காசி திருக்குறள் கழக வெள்ளி விழாமலர்:— தமிழ் நாட்டிலுள்ள சிறந்த ஆராய்ச்சிப் புலவர்கள் 25 கட்டுரைகளை எழுதியிருக்கின்றார்கள். மிகச்சிறந்த கருத்துக்கள், தெளிந்த நடையில் எழுதப்பட்டுள்ளன. தமிழ் நாட்டு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமே யன்றிப் பொது மக்களுக்கும் பயன்படத்தக்கவை. நல்ல காகிதத்தில் சிறந்த முறையில் அச்சடிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு படிப்பகமும் இந்நூலை வாங்கிவைக்க வேண்டும். இதிலுள்ள சிறந்த கட்டுரைகளாவன: காமத்துப்பால், வீடு, சமயம், இல்லறம், துறவறம், சொல்லாட்சி, தெள்ளியர், குடிமை, காலம் முதலியன.

விலை ரூபாய் 5–0–0; தென்காசிக் கழகத்தில் கிடைக்கும்.

2. திருமுருகாற்றுப் படை விளக்கம்:—ஆசிரியர்- ஆர். பஞ்சநதம்பிள்ளை, திருச்சி. ஆசிரியரின் மணிவிழா மலராக வெளியிடப்பட்டது. முதலில் திருச்சி வானொலி நிலையத்தில் ஆறுவிரிவுரைகளாக நிகழ்த்தப்பெற்றுத் தற்போது தனிநூலாக வெளிவந்துள்ளது. பொதுமக்கள் திருமுருகாற்றுப்படையின் உட்கருத்துக்களை எளிதில் அறிவதற்கு இந்நூல் உதவிபுரியும். சிறப்பாக மாணவர்கள் இதனைப் படிப்பார்களாக.

3. தேவாங்கர் குல வரலாறும் கோத்திரம் முதலிய அகராதிகளும்:—தமிழ் நாட்டில் சிறந்த குலங்களில் ஒன்றாகிய தேவாங்கர்களைப்பற்றிச் சுருங்கிய அளவில் அவர்கள் வரலாறு வெளியிடப்பட்டுள்ளது. இப்பகுதியை எழுதியவர் கோவைகிழார் அவர்கள். அக்குலத்தாரின் கோத்திரம், ரிஷிப் பெயர்கள் முதலியவைகளை மிக சிரமப்பட்டுச் சேகரித்து எழுதியவர் காட்டுப்புத்தூர் திருவாளர் - கே. சி.

சுப்பைய செட்டியார் அவர்கள். குலத்தாரின் நன்மைக் காகச் செட்டியாரவர்கள் இந்நூலை வெளியிட்டுள்ளார்கள்.

3. இராஜபாரியம் (Diplomacy) :— இச்சிறு நூலை ஆங்கிலத்தில் திரு. அ. பிரகாஷ் அவர்கள் எழுதியுள்ளார்கள். இந்நூல் நான்கு பகுதிகளில் அமைந்துள்ளது. இதற்குப் பம்பாய் கவர்னர் பாஜ்பி முகவுரை எழுதியிருக்கின்றார்கள். இராஜபாரியம் என்ற அரிய பொருளைப் பற்றி ஒரு தந்தை தன் மகனுக்கு விளக்கி எழுதும் முறையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தற்காலத்தில் இந்தியர்களுக்கு அரசியல் அறிய வேண்டுமாயின் இந்நூல் பயன்படும். திருக்குறளில் 'தூது' என்ற அதிகாரத்தில் வகுத்துள்ள முறைகள் இந்நூலை அறிவதற்குப் பெரிதும் பயன்படும். திருக்குறளை ஒப்பிட்டு இந்நூல் கருத்துக்களை விரித்துப் பெரியதொரு நூலாக இதன் ஆசிரியர் எழுதுவாராக.

5. துறவி :—இது ஒரு திங்கள் வெளியீடு. ஆண்டுச் சந்தா ரூ. 2–8–0. திருவண்ணமலை, தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம் இதனை வெளியிடுகின்றது. பதிப்பாளர் எறும்பூர் சின்னமடம் சுவாமி ஞானனந்தா அவர்கள். இத்திங்கள் வெளியீட்டை வணக்கத்துடன் வரவேற்கின்றோம். இதனல் நமது நாட்டிற்குப் பெரும் பயன்விளையும் என்று எதிர்பார்க்கின்றோம். பொதுமக்கள் இதனை ஆதரிப்பார்களாக.

6. இந்துமத தர்ம பரிபாலனம்:—சந்தா ரூபாய் 6–0–0. இந்துமத பரிபாலனமானது நமது நாட்டில் இன்னும் ஒழுங்கு பெறவில்லை. அவ்வொழுங்கு எப்போது வருமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இவ்வெளியீடு வேண்டுபவர்கள் "இந்துமத தர்மபரிபாலனம்", மாயூரம் என்று எழுதவும்.

——

# ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள் வரலாறு

**(திருமந்திரமணி - துடிசைகிழார் - அ. சிதம்பரனர்)**

## ஆதார நூல்கள்

1. புஷ்பரத செட்டியார் 1873-ம் ஆண்டு பதிப்பித்த 9-ம் திருமுறை.
2. கருவூர்த் தேவர் (C. K. S. முதலியார்).
3. காசி மடத்தில் 1949-ம் ஆண்டில் பதிப்பித்த 9-ம் திருமுறை.
4. "சித்தாந்தம்" மலர் 4, 5, 6.
5. "செந்தமிழ்" Vol. 5.
6. சோழர் சரித்திரம் (N. M. V. நாட்டார்)
7. ஷை (நீலகண்ட சாஸ்திரியார்)
8. தஞ்சைக் கோயில் கல் வெட்டுக்கள்.
9. தமிழ் இலக்கிய வரலாறு (K. S. Pillai)
10. திருக்கற்குடிக் கோயில் கல்வெட்டுக்கள்.
11. திருவாலங்காட்டுச் செப்பேடுகள்.
12. திருவாவடுதுறைப் புராணம் (M. S. S.)
13. திருவீழிமிழலைப் புராணம் (M. S. S.)
14. திருவிடைமருதூர்ப் புராணம்.
15. திருவெண்காட்டுப் புராணம்.
16. பல்லவர் சரித்திரம் (மா. ரா. பிள்ளை)
17. ஷை (P. T. S.)
18. புலியூர்ப் புராணம்.
19. பெரியபுராணம்.
20. முதலாம் பராந்தகன் சாசனம் - புங்கனூர் (கன்னட மொழி) 1931—32-ம் ஆண்டு 200 செ.
21. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அகத்தியர் தேவாரத்திரட்டு.
22. வீடன் செப்பேடுகள்.

## தோற்றுவாய்

திருவிசைப்பா என்பது திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது அடியார்களால் பாடப்பெற்ற பாக்கள் ஆகும்.

திருப்பல்லாண்டு என்பது நாங்கூர்ச் சேந்தனார் என்பவரால் பாடப்பெற்ற பதின்மூன்று பாக்கள் ஆகும்.

அப்பாக்களுள் இப்போது உள்ளவை திருவிசைப்பா 288 திருப்பல்லாண்டு 13. ஆக. 301 பாட்டுக்களாகும்.

திருமுறைகள் பன்னிரண்டில் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் சேர்ந்தது ஒன்பதாம் திருமுறையாகும். திருவிசைப்பா பாடியவர்கள் இன்னார் என்பதனைப்பற்றி,

" செம்பொன்மணி அம்பலத்து நிருத்தனார்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர்தம் திருப்பேர்சொல்லில்
பம்புபுகழ் செந்திரு [1]**மாளிகை மெய்த்தேவர்**
பரிவுடைய [2]**சேந்தனார்,** [3]**கருவூர்த் தேவர்**
[4]**நம்பிகாடவர்கோன்,** நற் [5]**கண்டராதித்தர்,**
நன்குயர் [6]**வேணாட்டடிகள்,** [7]**திருவாலிஅமுதனார்,**
அம்புவியோர்புகழ் [8]**புருடோத்தமர்,** [9]**சேதிராயர்,**
ஆகஇவர் ஒன்பதின்மர் தாமுறை கண்டடைவே "

என்ற பாடலால் அறியலாம்.

திருவிசைப்பா பதிகங்கள் 28. திருப்பல்லாண்டு பதிகம் 1. ஆகப் பதிகங்கள் 29 என்றும், பாக்கள் மொத்தம் 365 என்றும், அடியில்கண்ட

" அடைவுறு மாளிகைத்தேவர் **நான்கு,** சேந்தர்
அன்புறுபல்லாண் டொன்றோ டிசைப்பா **மூன்று,**
திடமுடைய கருவூரர் **பத்து,** வீறிற்
சிறந்தகாடவர் **இரண்டு,** கண்டர் வேணாடர்
படிபுகழ் **ஒவ்வொன்று,** திருவாலி **நான்கு,**
பன்னுபுருடோத் தமனார் **இரண்டு,** சேதிராயர்
உடையதிருக்கடைக் காப்பொன்று ஆகஇருபத் தொன்பான்
ஓதுசெய்யுள் முந்நூற்றறுபதி னைந்தே "

என்ற பாடலால் அறியலாம்.



365 செய்யுட்களில் இப்போது இருப்பன 301. ஆதலால் 64 செய்யுட்கள் காலகதியால் இறந்துபட்டன என்று கொள்ளவேண்டும்.

திருவிசைப்பா என்ற சொற்றொடரின் பொருள் வருமாறு :—

" திருவிசைப்பா என்னும் சொற்றொடரானது, தன்னிற் சிறந்த உருவும், நலனும், ஒளியும் பிறிதொன்றிற் கில்லாத அழகு வாய்ந்தமையின், கண்டோரால் விரும்பப் படும் தன்மை வாய்ந்த இறைவனுடைய பொருள்சேர் புகழ்களைக் கூறும் தமிழ்ப்பாட்டு என்று பொருள் " என்று கருவூர்த்தேவர் பக்கம் **39-40**ல் கூறப்பட்டுள்ளது காண்க.

மேலே கூறப்பட்ட திருவிசைப்பா ஆசிரியன்மார் ஒன்பதின்மர், திருப்பல்லாண்டு ஆசிரியர் ஒருவர், ஆகப் பதின்மர்களுடைய வரலாறுகளை விரிவாகக் காலவரையறையுடன் இதுவரை ஒருவரும் எழுதவில்லையாதலால், இது வரை கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு ஒருவாறு வெளியிடலானேன். இதில் வெளியிடப் பட்டிராத விவரங்களைத் தெரிந்தவர்கள் "சித்தாந்தம்" மூலமாக எழுதுவார்களானால் உலகிற்கு உபகாரமாயிருக்கும். சரித்திரங்களும் முற்றுப்பெறும்.

இதேமாதிரி காலஞ்சென்ற வித்வான் திருவாரூர் இலக்கண விளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகர் சின்னாள் முன்னர் முயற்சி செய்தார். ஆனால், அது முற்றுப் பெறவில்லை. (Vide, சித்தாந்தம் மலர் 5 - இதழ் 3.)

அவர் ஆராய்ந்ததோடு, அவர் காலத்துக்கு அப்புறம் இதுவரை கிடைத்துள்ள விபரங்களைச் சேர்த்து எழுதி வைத்தால், பின்னால் முழுவதும் தெரிந்து எழுதுகிறவர்களுக்கு அனுகூலமாயிருக்கும் என்று எண்ணி, ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்களின் சரித்திரங்களைத் தெரிந்த வரையில் எழுதி வெளியிடுகின்றேன்.

ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்களின் பெயர், குலம், ஊர், காலம், பதிகஎண் முதலியன வருமாறு:—

1. திருமாளிகைத்தேவர் II—ஆதிசைவர்—திருவிடைமருதூர் (சோணாடு)-கி. பி. 8ம் நூற். முற்பகுதி-4.

2. வீழிச்சேந்தனார்—மறையவர் — திருவீழிமிழலை (மிழலை நாடு)—கி. பி. 8ம் நூ. நடுப்பகுதி—3

3. கருவூர்த்தேவர்—மறையவர்—கரூர் (கொங்குநாடு)—கி. பி. 10ம் நூ. பிற்பகுதியும் கி. பி. 11ம் நூ. முற்பகுதியும்.—10

4. பூந்துருத்தி நம்பிகாடநம்பி — பல்லவர் — பூந்துருத்தி (சோணாடு)—கி. பி. 10ம் நூ. நடுப்பகுதி—2

5. கண்டராதித்தர் I—சோழர்—உறந்தை (சோணாடு)—கி. பி. 10ம் நூ. நடுப்பகுதி—1

6. வேணாட்டடிகள்—சேரர்—திருவாங்கூர் (வேணாடு)—கி. பி. 9ம் நூ. முற்பகுதி—1

7. திருவாலி அமுதனார் — அந்தணர் — மயிலை (ஆலிநாடு)—கி. பி. 9ம் நூ. முற்பகுதி—4

8. புருடோத்தமநம்பி—அந்தணர்—தில்லை (நடுநாடு)—கி. பி. 10ம் நூ. நடுப்பகுதி—2

9. சேதிராயர்—மழவர் (மலைமன்னர்)—திருக்கோவலூர் (நடுநாடு)—கி. பி. 10ம் நூ. நடுப்பகுதி—1

10. நாங்கூர்ச்சேந்தனார் - வேள்-நாங்கூர் (ஆலிநாடு)-கி. பி. 10ம் நூ. நடுப்பகுதி—1

பதிகங்கள் மொத்தம். 29

முதலாம் இராசராசனால் (984 - 1013 A. D.) தஞ்சையில் பெரிய கோவில் கட்டப்பட்டு, அக்கோவிலின் கைங்கரியங்கட்கு நியமிக்கப்பட்ட தளிச்சேரிப் பெண்டுகள் (தேவர் அடியார்—Nuns) சிலர் தரித்திருந்த பெயர்களிலே "நீறணி பவளக்குன்றம்" — "எடுத்தபாதம்" — "மழலைச்சிலம்பு" என்ற நாமங்களையும் காணலாம். (S. I. I. Vol. II—66) இவற்றுள் "நீறணிபவளக் குன்றம்" என்ற தொடர்



திருமாளிகைத் தேவர் II திருவிசைப்பா முதற்பதிகத்து ஆறாம்பாட்டின் முதல் அடியில் உள்ளமையும், ஏனைய திருவாலி அமுதனார் திருவிசைப்பா மூன்றாம் பதிகத்துள் 5-ம் பாட்டின் 3ம் அடியின் இடைச்சீர்களாக இருத்தலும் அறியத்தக்கன.

இதனால் அருட்பாக்களின் தொடர்களை மக்கள் பெயர்களாக வைப்பது கி. பி. 10ம் நூற்றாண்டிலேயே வழக்கத்துக்கு வந்து விட்டன என்று தெரிகிறது.

வைஷ்ணவர்களுக்குள் இவ்வழக்கம் மிகுதியும் உண்டு. ஆழ்வாராதிகளின் பாடல்களில் உள்ள தொடர்களை அர்ச்சாவதாரங்களுக்கும் மக்களுக்கும் இட்டு வழங்குகிறார்கள்.

சோழசிங்கபுரத்தில் (Sholingur) உள்ள நரசிம்ம மூர்த்தி விக்கிரகத்துக்கு "அக்காரக்கனி" என்று பெயரிட்டு வழங்குவது நோக்கத்தக்கது. திருவள்ளுவ மாலையில் "அக்காரக்கனி நச்சுமனார்" என்ற பெயரையுடைய புலவர் ஒருவர் திருக்குறளுக்குச் சாற்றுக்கவி அளித்திருப்பது புலனாம்.

ஆதலின், திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் கி. பி. 8ம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 11ம் நூற்றாண்டிற்குள் பாடப்பட்டவையே. அவைகளைப் பாடிய ஆசிரியர்களும் அக்கால அளவைக்குள் வாழ்ந்தவர்களே ஆவர்.

இனி, திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆசிரியர்களின் வரலாறுகளை ஒவ்வொன்றாக ஆராய்வாம்.

## I. திருமாளிகைத் தேவர் - II

(காலம்—கி. பி. 8-ம் நூற்றாண்டின் முற்பகுதி)

### (அ) பிறப்பு

சோழ நாட்டில் உள்ள திருவிடை மருதூர் என்ற தலத்தில் மருதவாணரது ஆலய வழிபாடு செய்யும் ஆதிசைவரில் ஐம்பெரும் பிரிவுகள் உண்டு. அவராவார் :—

1. பரியேறும் பெரியோர்.
2. தெய்வப் படிமப் பாதம் வைத்தோர்.

3. மாணிக்கக் கூத்தர்.
4. குருராயர்.
5. சைவராயர் என்பவர்.

ஆதிசைவர் என்பார் தமிழ் நாட்டு அந்தணர். தொல்காப்பியத்தில் கூறப்பட்ட அந்தணர் - அரசர் - வணிகர் - வேளாளர் என்ற நாற்பிரிவுகளுள் அந்தணர் பிரிவைச் சேர்ந்தவராவார். அந்தணர் — அரசர் - வணிகர் - வேளாளர் என்னும் சொற்கள் பிராமண - க்ஷத்திரிய - வைசிய - சூத்திரர் என்ற வடமொழிச் சொற்களின் மொழி பெயர்ப்பு அல்ல என்பதை ஒவ்வொருவரும் ஞாபகம் வைக்கவேண்டும். ஆதலின் ஆதிசைவர், பிராமணர் அல்லர் என்பது அறியத்தக்கது.

பவுராணிக முறைப்படி பார்த்தாலும் பிரமன் - விஷ்ணு - உருத்திரன் - மகேசன் - சதாசிவன் என்ற ஐந்து மூர்த்தங்களில், பிரமா முகத்தில் உற்பவித்தவர்கள் பிராமணர். ஆனால் ஆதிசைவரோ, சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களினின்றும் பிறந்தவராகக் கூறப்படுகிறது. ஆதலின், இருவரும் பிறப்பினால் வேறுவேறு ஆவர்.

மேலே கூறப்பட்ட, ஆதிசைவருக்குள் ஏற்பட்ட ஐம்பெரும் பிரிவுகளில் சைவராயர் என்பார் ஒரு பிரிவார். அப்பிரிவார் குடியிருக்கும் வீட்டுக்குத் "திருமாளிகை" என்று பெயர்.* இவர்கள் பரம்பரையாகச் சோழ அரசர்களின் குருமார்கள் ஆவர். சோழ அரச குடும்பங்களில் முன் (பூர்வ) பின் (அபர) கிரியைகளைச் செய்பவரும், ஐம்பெருங்குழு, எண்பேராயம் இவைகளில் உறுப்பினர்களாக இருப்பவரும் ஆவர். மேலும் அரசர்களுக்கு, குறி நூல் - கோள்நூல் - உளநூல் நுட்பங்களைக் கூறும் தொழிலையும் உடையவர்.

இத்தகைய திருமாளிகையைச் (சைவராயர் பிரிவை) சேர்ந்த ஆதிசைவ அந்தணரில் ஒருவருக்கு (அவருடைய இயற்பெயர் இன்னதென விளங்கவில்லை) நம் திருமாளிகைத்

*சித்தாந்தம் மலர் 5; இதழ் 3; பக்கம்-76.



தேவர் II என்பவர் மகனாகப் பிறந்தார். பிறக்கும் பொழுதே முன்செய் நல்வினைப் பயனால் நல்ல மனப்பக்குவத்தை அடைந்து இருந்தார். இளமையிலேயே உலகநூல்- அறிவு நூல்களைச் செவ்வனே கற்று, உணர்ந்து, கற்றபடி ஒழுகியும் வந்தார். செய்யுள் செய்யும் ஆற்றலும் வாய்ந்தவராக இருந்தார். இயம, நியமங்களை நழுவவிடாமல் கைக்கொண்டார். அவரை எல்லோரும் திருமாளிகைத் தேவர் என்றே அவருடைய வீட்டுப் பெயரால் அழைப்பது வழக்கம்.

> " உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற்கு உரு

என்ற தமிழ் வேத வாக்குப்படி எவ்வுயிரையும் தம் முயிர்போல் பாவித்து அன்புகொண்டு நடந்து வந்தார். திருமாளிகையில் இருந்துகொண்டு, அரச காரியங்களையும் பார்த்துக்கொண்டு, உலகவிகாரங்களில் காலத்தைக் கழிப்பது அவருக்குப் பிடிக்கவில்லை.

## (ஆ) தவம்

> " தவம்செய்வார் தங்கருமம் செய்வார் ; மற்றல்லார்
> அவம்செய்வார் ஆசையுட் பட்டு " (தமிழ் வேதம்)

என்ற குறளின் பொருளைத் திருமாளிகைத் தேவர் உணர்ந்தவர் ஆதலின், அவர் திருவாவடுதுறை சென்று, தவம் இயற்ற நினைந்து, திருமாளிகை வேலையைத் தம் தாயத்தார் ஒருவருக்குக் கொடுத்துவிட்டு, திருவாவடுதுறை சென்றார்.

> " வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
> ஈண்டு முயலப் படும் " (தமிழ் வேதம்)

என்ற முதுமொழிக் கிணங்க, அவர் திருமூலர் தவம் இருந்து பேறுபெற்ற படர் அரசின் கீழ்த் தவம் செய்து வந்தார்.

கி. மு. 3100 முதல் கி. மு. 100 வரை மூவாயிரம் ஆண்டுகள் திருவாவடுதுறைக் கோவிலின் வெளிச்சுற்றின் (வெளிப்பிரகாரம்) வடமேற்கு மூலையில் அப்போது படர்ந்து வளர்ந்திருந்த அரசின் கீழ்ச் சுந்தரநாதர் என்ற இயற்பெயர் வாய்ந்தவரான, சாத்தனூர் கோக்குலம் மேய்க்கும் இடையன் மூலனுடைய குரம்பை புக்கு, மூலனாக எழுந்தவருமான, ஒப்பிலா முலை அம்மை பங்கர் மாசிலாமணி ஈசர் அருள்பெற்றவருமான திருமூலர் தவம் செய்த இடம் அதுவாகும். அந்த இடத்தில் இப்போது திருமூலருக்குக் கோவில் ஒன்று சான்றாக உளது.

## (இ) படர் அரசு

அரசமர இனத்தில் அரசு - படர் அரசு - பூவரசு எனப் பலவகை உண்டு. படர் அரசு என்பது சுற்றிச் சுற்றிப் படர்ந்து வளரும். ஓர் இடத்தில் இருந்ததைச் சில ஆண்டுகளில் வேறு ஓர் இடத்தில் காணலாம். திருமூலர் காலத்தில் வடமேற்கு மூலையில் இருந்த மரமானது இப்போது கோவிலின் கீழ்த்திசையில் உள்ளது கண்கூடு. திருமூலர் கயிலை சென்ற காலத்திலிருந்து தற்காலம் கி. பி. 1953–க்கு [கி. மு. 100 + கி. பி. 1953] = 2053 ஆண்டுகள் ஆகின்றன. ஆதலின், அந்த அரசு இப்போது கோவிலில் இருக்கும் திசையை நோக்கின், ஒரு திசையைத் தாண்டிச் செல்வதற்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன என்பது போதருகின்றது.

திருமாளிகைத் தேவர் காலத்தில் இவ்வரசு வடகிழக்கு மூலையில் இருந்திருக்க வேண்டும். திருமாளிகைத் தேவர் காலம் இற்றைக்குச் சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகள் ஆகின்றன. ஆதலால் அப்படர் அரசு வடகிழக்கு மூலையிலிருந்து, இப்போது தென்கிழக்கு மூலையில் படர ஆரம்பித்து உள்ளது. வடகிழக்கு மூலையிலும் சில பழைய அரசமரங்கள் உள்ளன. தென்கிழக்கு மூலையில் படர ஆரம்பித்து ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாம்.



## (ஈ) உபதேசம் பெற்றது

திருமாளிகைத் தேவர் திருவாவடுதுறையில் வெளிச் சுற்றின் வடகிழக்கு மூலையில் படர் அரசின்கீழ் தவம் இயற்றிக் கொண்டிருக்கும்போது, திருமூலர் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வந்தார். அப்போது முருகக் கடவுள் அருளைப் பெற்ற போக முனிவர் ஆவடுதுறை சென்றார். போகர் எண்சித்திகளும் கைவரப்பெற்றவர். சித்தர் குழாத்தில் தலைமை வகித்தவர். புலிப்பாணி - கொங்கணர் II முதலிய பல மாணவர்களுக்குக் குருவானவர்.

கி. பி. 13–ம் நூற்றாண்டில் மெய்கண்டாருக்குப் பரஞ்சோதி முனிவர் குருவாக வாய்த்தது போல, திருமாளிகைத் தேவருக்குப் போக முனிவர் குருவாக வாய்த்தார்.

“ தவமும் தவமுடையார்க்கு ஆகும் ; அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது ” (தமிழ் வேதம்)

என்ற பொய்யா மொழிப்படி அவருக்குத் தவம் பலித்தது.

போகர் திருவாவடுதுறையில் சிவபெருமானை வணங்கிப் பின் வலமாக வரும்போது, படர் அரசின்கீழ் தவம் இயற்றும் திருமாளிகைத் தேவரின் அதிபக்குவ நிலை கண்டு அவருக்கு உபதேசம் செய்து, ஞான நூல்களைப் போதித்து, சைவசமயத்தை வளர்க்கும்படி ஆஞ்ஞாபித்துச் சென்றார்.*

அதுமுதல், திருமாளிகைத் தேவர் ஆலயத்துக்குப் பக்கமாக மடம் ஒன்று அமைத்து, மாணவர்களைச் சேர்த்து, அவர்களுக்கு ஞான நூல்களைப் போதித்து மாகேசுர பூசை செய்துகொண்டு சைவசமயத்தை வளர்த்து வந்தார்.

இந்த மடம் நமச்சிவாய மூர்த்திகளால் ஏற்படுத்தப் பட்ட மடத்துக்கும் முந்தினது. இப்போது இரு மடங்களும் ஒன்றாக விளங்குகிறது. மடத்திற்குள் திருமாளிகைத் தேவர் கோவிலுக்குப் பக்கத்திலேயே நமசிவாய மூர்த்திகள் கோவிலும் இருக்கிறது.

* திருவாவடுதுறைப் புராண

## (உ) சித்திகள் கைவரப் பெற்றமை

திருமாளிகைத் தேவர் தாம் செய்த தவத்தின் பயனைக் கண்டார் காமுறும் உடம்பைப் பெற்றார்.

" பிண்டத்துள் உற்ற பிழைக்கடை வாயிலை
அண்டத்துள் உற்று அடுத்தடுத்து ஏகினால்
வண்டிச் சிக்கு மலர்க்குழல் மாதரார்
கண்டிச்சிக்கும் காயமு மாமே " (திருமூலர் - 716)

என்ற மூலர் வாக்கின்படி அவருடைய உடம்பானது தவம் முற்ற முற்ற ஒளிமிக்கு அழகுடைத்தாக விளங்கியது.

" சுடச்சுடச் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு "

என்னும் குறட்பாவையும் நோக்குக. அவர் கண்டவர் காமுறும் கட்டழகு வாய்ந்தவராக இருந்ததோடு, எண் சித்திகளும் கைவரப்பெற்று, சிறந்த சித்தராக விளங்கினார்.

### 1. குடங்கர் விசும்பிடை நிறுவியது

திருமாளிகைத் தேவர் நாடோறும் சூரியன் உதிக்க 5 நாழிகை முன் எழுந்து, காவிரிக்குச் சென்று காலைக் கடன்களை முடித்து, நீராடி வருவது வழக்கம். அப்படி நீராடி வரும்போது, தம்முடைய சிவபூசைக்குக் காவிரிநீர் ஒரு குடத்தில் எடுத்து வருவது உண்டு. இப்படி நடந்து வரும்போது ஒருநாள் இவர் திருமஞ்சனக் குடத்தை விசும்பிடை வீசி, அதனைத் தம்மோடு கூடவே மடத்துக்கு வரும்படி பணித்து, மடத்துக்கு வந்ததுமே அதனை எடுத்துக் கொண்டார். இப்படிச் சிலநாள் நடைபெற்று வந்தது. ஊரில் இதனைக் கண்ட பலரும் அதிசயித்து திருமாளிகைத் தேவரின் தவத்தினை மெச்சி வந்தனர்.

### 2. குணபம் நடந்திடச் செய்தது

ஒருநாள் திருமாளிகைத் தேவர் காவிரியில் நீராடி விட்டு, திருமஞ்சனக் குடத்தை விசும்பிடை நிறுவித் தம்மோடுகூட வரப் பணித்து, மடத்தை நோக்கி வரும்வழியில், எதிரே மக்கள் ஒரு சவத்தை மயானத்துக்கு எடுத்துவர, சவத்தீட்டுத் தம்மைத் தொடக்குறு வண்ணம் விநாயகரை வேண்ட, விநாயகர் அருளால் அச்சவம் உயிர்பெற, மக்கள் உணர்ந்து, பாடையைக் கீழிறக்கி, கட்டை அவிழ்த்துவிட, அச்சவம் எழுந்து, மரணம் நீங்கி, திருமாளிகைத் தேவரை வணங்கிப் பின் ஊர்புக்கது. இதனைக் கண்ட மக்கள் தேவரிடம் பயமும் பக்தியும் கொண்டார்கள். தேவருடைய சித்தியை மக்கள் புகழ்ந்து கொண்டாடினார்கள்.



### 3. கொடிஞ்சிப் பொற்றேர் வடம் கழற்றி ஓட்டியது

மேற்கூறிய நிகழ்ச்சிகள் நடந்தபின் மக்கள் தேவரை அடிக்கடி தரிசனம் செய்யவும், அவருடைய மகிமையை உணரவும் கூட்டம் கூட்டமாக வந்தனர். அதனால், அவர் தவத்துக்கு அது இடையூறாக நிகழவே, அவர் கொஞ்ச நாள் திருவாவடுதுறையை விட்டு நீங்கி, திருவீழிமிழலைக்குச் சென்று, அங்கே வதிந்து, தவம் இயற்றி வந்தார். அப்படி அவர் அங்கே இருக்கும் காலத்தில், அக்கோவிலில் சில திருப்பணிகளைச் செய்தார். அத்திருப்பணிகளைப் பற்றிக் கோவில் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அப்படி இருந்துகொண் டிருந்த நாளில், ஓர் ஆண்டு தேர்விழாவில் தேரை மக்கள் இழுக்கமுடியாது போகவே, தேர் இழுப்பது நின்றுவிட்டது. இதனை அறிந்த தேவர் அங்கே சென்று தேர் வடங்களை எல்லாம் கழற்றிவிடச் செய்து, தமக்கும் தேருக்கும் ஒரு சிறு நூல்கயிற்றை இணைத்து, கயிறு அறுந்தால் தாம் பிராணனை விட்டுவிடுவதாகத் தீர்மானித்து, தம்முடைய ஆர்வத்தால் உண்டான அன்பினால் தேரை நான்கு வீதிகளிலும் இழுத்து நிலைக்குக் கொண்டுவந்து சேர்த்தினார். அன்பினால் ஆகாததும் ஒன்று உண்டோ ?

இப்படி இவர் செய்த காரியமானது திருப்பனந்தாளில் கி.பி.7-ம் நூற்றாண்டில் குங்கிலியக்கலயநாயனார் சிவலிங்கத்தை நேர்செய்த காரியத்துக்கு ஒப்பானதாகும். இது,

" கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு " (தமிழ் வேதம்)

என்ற தமிழ் வேதவாக்கை உறுதிப் படுத்துவதாயிற்று.

**4. மதில் நந்திகளை உயிர்ப்பித்துப் போருக்கு அனுப்பியது**

இது நடந்தபின் சின்னாட் கழித்து, தேவர் திருவீழி மிழலையினின்றும் புறப்பட்டுத் திருவாவடுதுறை வந்து வழக்கம்போல் காலையில் காவிரிக்குச் சென்று நீராடி வந்து, மடத்தில் சிவபூசை முடித்துக்கொண்டு மகேசுவர பூசையும், சைவ ஆகம விவரிப்பும் நடத்திக்கொண்டு தவத்தில் இருந்து வந்தார். இவருடைய தவமகிமையும், புகழும் எங்கும் பரவவே, இவர் காவிரிக்கு நீராடப் போகும்போதும் வரும்போதும் இவரைப் பார்த்த, காவிரிக்குச் சென்று நீர்முகந்து கொண்டுவரும் மாதர்கள், இவருடைய அழகமைந்த உருவத்தையே மனதில் கொண்டார்கள். அதனால், எல்லா மாதர்களும் இவரைப் போலவே குழந்தைகளைப் பெற்றார்கள். ஆதலின், அம்மாதர்களின் கணவன்மார்கள் தேவரைப்பற்றி அலர் தூற்றத் தொடங்கினர். இதற்கு எல்லாம் காரணம் அவர்களுக்குக் கருப்பநூல் விதி தெரியாமையே யாகும்.

கணவனும் மனைவியும் சம்போக காலத்தில் தங்களுக்கு எத்தன்மைய, எந்நிறத்த, குழந்தைகள் வேண்டுமென்று ஒரே மனதாய் எண்ணுகிறார்களோ, அப்படியே குழந்தைகள் பிறப்பது கருப்பநூல் விதியாகும்.

கருப்புநிறப் பெற்றோருக்குவெண்ணிறப் பொன்னிறக் குழந்தைகளும், வெண்ணிறப்பொன்னிறப் பெற்றோருக்குக் கருப்புநிறக் குழந்தைகளும் பிறக்கின்றமைக்கு அவரவர் எண்ணங்களே காரணமாகும். மேலும், கணவன் மனைவிமார்களில் இருவரில் ஒருவர் யாருடைய கருத்து உரமாய் இருக்கிறதோ அதன்படி எந்த மாதிரி உருவத்தை மனதில் கொண்டார்களோ ஏறக்குறைய அந்த உருவச் சாயலாகக் குழந்தை பிறப்பதும் உண்டு. படுக்கை அறையில் பல அழகான உரு அமைந்த படங்களைத் தொங்கவிடுவதின் நோக்கமும் இதுவே. ஒவ்வொருவரும் உடல்நூல்-உளநூல்-கருநூல் முதலியவைகளைப் பற்றிச் சிறிதேனும் அறிந்திருப்பது நல்லது.

குதிரையைப் பலம்பட விடும்போது, குதிரையின் கண்களைக் கட்டிவிட்டு, ஆண்குதிரை மிதித்து ஆனவுடன், கட்டியிருந்த கண்மூடியை அவிழ்த்துவிட்டு, எதிரே ஓர் அழகான,



கட்டுமஸ்தான ஆண் குதிரையை நிறுத்துவது வழக்கம். இது எதனைக் குறிக்கிறது? மிருகங்களுக்கும் எண்ணங்களினால் பிறக்கும் குட்டிகள் உருமாற்றம் அடைகின்றன என்பதனைத் தெளிவாகக் குறிக்கிறது.

இவ்விவரங்கள் எல்லாம் திருமூலர் தாம் பாடிய தமிழ் மூவாயிரத்தில், இரண்டாம் தந்திரத்தில், ' கரு உற்பத்தி ' என்ற தலைப்பில் விவரித்துள்ளமை காண்மின்.

இவ்வுண்மை அறியாத திருவாவடுதுறையில் இருந்த கணவன்மார்கள் எல்லாம், திருமாளிகைத் தேவர்மீது ஐயங்கொண்டு, அக்காலத்தில் அந்நாட்டை ஆண்டுவந்த நரசிங்கன் என்னும் அரசனிடம் சென்று முறையிட்டார்கள்.

**நரசிங்கன்**

திருவாவடுதுறைப் புராணத்தில் கூறப்பட்ட நரசிங்கன் என்பவன், பல்லவர் காலத்தில் நடுநாட்டையும், சோழ நாட்டையும் ஆண்டுவந்தான். சோழநாடு ஆனது கி. பி. 225 முதல் கி. பி. 850 வரை பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது என்ற சரித்திரப்பகுதியை ஒவ்வொருவரும் நினைவு கூர வேண்டியது. [தொடரும்]

---

## செய்தித் திரட்டு

16—8—53. **ஆடி சுவாதித் திருநாள் :** சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் குருபூஜை அடியிற்கண்ட இடங்களில் கொண்டாடப்பட்டன.

1. திருவஞ்சைக்களம் : கோவை சேக்கிழார் திருக்கூட்டத்தார் விசேஷ ஆராதனைகளுடன் திருவிழா நிகழ்த்தினார்கள். வரலாற்றுச் சொற்பொழிவுகள் தேவாரப் பரிசுகள் முதலியன நடந்தன. தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அன்பர்கள் வந்திருந்தனர்.

2. திரிசிரபுரம் : சைவசித்தாந்தச் சபையில் திருவாசகமணி அவர்கள் சுந்தரமூர்த்திகள் வரலாற்றைப் பற்றிப் பேசினார்கள்.

3. இடிகரை வல்லீசுவரர் ஆலயம் : திரு. அருணாசல நாட்டார் தலைமையில் ரா. ப. தங்கவேல், ந. சுந்தர

ராசன், இராமாமணிபாய் அம்மையார் முதலியோர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

4. திருப்பேரூர் ஆலயம்: சுண்டக்காய்முத்தூர் அன்பர்களால் திருவிழா நடத்தப்பட்டது.

5. திருப்பனந்தாள் ஆதீனம்: ஆலால சுந்தரர் நினைவு இன்னிசைத் திருமுறைவிழா. திருவாரூரில், 12 இசைப்புலவர்கள் திருவிழா நடத்தினார்கள்.

20—8—53. தருமபுர ஆதீனம்: குன்றக்குடி மகா சந்நிதானம் தலைமையில் ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார் அவர்களுக்கு "விஞ்ஞானச் செல்வி" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

28—8—53. இந்து மதாபிமானச் சங்கம்: காரைக்குடி. செட்டி நாட்டரசர் தலைமையில் முருகப்பனார் மணிவிழாவும், அடுத்த நாள் டாக்டர்-சிதம்பரநாதம் செட்டியார் தலைமையில் 36-வது ஆண்டுவிழாவும் நடைபெற்றன.

### கோவைத் தமிழ்ச் சங்கம்

26—7—53. வித்வான் எஸ். இராசகோபால் திருக்குறளும் வாழ்க்கையும் என்னும் பொருள்பற்றி விரிவுரை ஆற்றினார்கள. டாக்டர் - என். சுப்பிரமணியம் தலைமை வகித்தார்கள்.

2—8—53. வடமொழி ஆசிரியர் விஜயராகவாச்சாரியார் "கிருஷ்ண கர்ணாமிர்தம்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். வித்வான் - டாக்டர் என். ஆறுமுகம் பிள்ளை தலைமை வகித்தார்கள்.

9—8—53. கோவைகிழார் தலைமையில் ஆசிரியர் திரு. அ. ரா. சதாசிவன் "பரதன் பண்பு" என்னும் தலைப்பில் அரிய சொற்பொழிவாற்றினார்.

### வாலாஜாபாத்தில் சமாஜச் சார்பில் சுந்தரர் திருவிழா

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் 23—8—53 ஞாயிறன்று சைவசித்தாந்த மகாசமாஜம் சுந்தரர் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடிற்று.

அன்றுகாலை சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் ஆயுள் அங்கத்தினரும் பிரபல காண்ட்ராக்டரும், சென்னை நகரசபை அங்கத்தினருமாகிய திரு. கமலக்கண்ண முதலியார் தலைமையில் பள்ளிக்கூடச் சிறுவர்கள் விரதாச்சாரி விளையாட்டு, ஆசனங்கள், உரையாடல் முதலிய கலைகளால் வந்திருந்தோரை மகிழ்வித்தனர். பின்னர் மூன்று சிறுவர்களுக்குச் சமாஜத்தின் சார்பில் திரு. யமுனாபாய் கமலக்கண்ணன் அவர்கள் புத்தகப் பரிசு வழங்கினார்கள். திரு. வா. தி. மாசிலாமணி முதலியாரவர்கள் கமலக்கண்ணனுக்கு வரவேற்பு வாசித்தளித்தார்.



பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் உதவித் தலைவர் - வே. தியாகராய முதலியாரவர்கள் குழந்தைகளின் சீலத்தையும் திறத்தையும் பாராட்டி ஆசீர்வதித்தார். பள்ளிக்கூடத் தந்தை திரு. வா. தி. மாசிலாமணி முதலியாரவர்களின் தன்னலமற்ற தொண்டைப் புகழ்ந்து பேசினார்.

பிற்பகல் உருக்குமணி குக்கர் கம்பெனியின் உரிமையாளரும் சமாஜத்தின் உழுவலன்பினருமான திரு. அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ. தலைமை வகித்தார். அவருக்குத் திரு. வா. தி. மாசிலாமணி முதலியாரவர்கள் வரவேற்புரை வாசித்தளித்தார்.

கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும் சமாஜத்து ஆராய்ச்சிக் குழுவினருள் ஒருவருமாகிய திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம். ஏ. "சுந்தரரும் செந்தமிழும்" என்னும் பொருள் பற்றிச் சுருக்கமாகவும் செம்மையாகவும் பேசினார்.

சமாஜத் தலைவர் சைவத் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. எ., எல். டி. சுந்தரருடைய வாழ்க்கை வரலாற்றைச் சிறுவர்களுக்கு விளங்கும்படி விளக்கிச் சொன்னார். சமாஜக் காரியதரிசி திரு. ச. சிவகுமாரன் நன்றிகூறச் சுந்தரர் திருவிழா இனிது நிறைவேறியது.

### திருஉத்தரகோசமங்கையில் சமாஜக் கூட்டம்

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் ஆகஸ்ட் மாதக் கூட்டம் திருஉத்தரகோசமங்கையில் 16—8—53 இரவு நடைபெற்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாளும் அவ்வமயம் கொண்டாடப் பெற்றது. முதலில் மங்களநாதர், மங்களேசுவரி, நடராஜப் பெருமான், சகஸ்ரலிங்கம்,

மீனாட்சி சுந்தரம் பிள்ளை (13) டி. கே. ஷண்முகம் (14) கி. வா. ஜகன்னாதன் (15) டாக்டர். பி. வரதராஜுலு நாயுடு, எம். எல். ஏ. (16) திருமதி லீலாவதி ராமசுப்பிரமணியம்.

இக்குழுவினர் தமிழன்பர்களுக்கு விடுக்கும் விண்ணப்பம் பின் வருமாறு :

“ திரு. வி. க. என நம்மால் அன்புடன் அழைக்கப்படும் திருவாரூர் - வி. கலியாணசுந்தர முதலியார் தமிழ் நாட்டின் தவப் புதல்வராய்த் தோன்றியவர் ; தமிழ்க்கலைக்கோர் நிலைக்களனாய் வளர்ந்தவர் ; தமிழ்ப் பண்பே உருவாய்த் திகழ்பவர்.

உலகமே அவருக்கு ஒரு பெருங்குடும்பம் ; சமரச சன்மார்க்கமே அவர் வாழ்வு ; பெண்ணின் தெய்வப் பண்பைப் போற்றுவது அவர் உள்ளம். அவரது அகத்திற்போலவே புறத்தும் காண்பது சைவப் பொலிவு. காந்தியப் பொதுமை அவரது அரசியல் ; தொழிலாளர் துயரம் தீர்ப்பது அவர் தொண்டு.

திரு. வி. க. வின் தமிழ்நடை சுருக்கமும் முறுக்குமுடைய தாய்த் தமிழுக்கோர் புத்துயிர் அளித்த பெருமை சான்றது. அவர் ஒழுக்கமே உருவமானவர் ; மூவாசையற்றவர். அவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்.

இப்பெருந்தகையார் தம் இளமைப் பருவத்திலேயே தோற்றுவித்தது ஸ்ரீபால சுப்பிரமணிய பக்தஜன சபை. இதன்கண் இப் பெரியாரின் பெருமைக்கோர் அறிகுறியாக—தமிழன்பர்கள் நன்றியின் சின்னமாக—**திரு. வி. க. மண்டபம்** என்னும் பெயருடன் ஒரு பிரசங்க மண்டபத்தை இச்சபையின் ஆதரவில் அமைத்தல் சாலவும் பொருத்தமாகும்.

இதற்கு அன்பர்கள் அனைவரும் தங்களாலியன்ற அளவு பொருள் உதவி, இப்பணியை முற்றுவிக்கும்படி அன்புரிமையுடன் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

இராயப்பேட்டை<br>சென்னை-14<br>7-9-53

**ச. சச்சிதானந்தம் பிள்ளை,**<br>காரியதரிசி, திரு. வி. க. மண்டப அமைப்புக்குழு

மாணிக்கவாசகர் இந்த சந்நிதிகளில் வழிபாடு நடைபெற்றது. "சந்தனச்சாந்தின் சுந்தர போற்றி" என்று மணிவாசப் பெருந்தகை புகழ்ந்து பாடிய நடராஜப் பெருமான் திருமுன் மண்டபத்தில் சிவகிரி திரு. கே. சுப்பையாத் தேவர் அவர்களின் தலைமையில் கூட்டம் கூடியது. தலைவர் அவர்களின் முகவுரைக்குப்பின் திரு. ஜி. கலியாணம் பிள்ளை, எம். ஏ. அவர்கள் "வாதவூரரும் காவலூரரும்" என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின். திரு. பி. எஸ். இலட்சுமிநாராயணய்யர் அவர்கள் நன்றி கூறினார்கள். திருமுறைப் பாராயணத்துடன் கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது முடிந்தது. இராமநாதபுரத்திலிருந்தும், உத்தரகோசமங்கைக்குப் பக்கத்து ஊர்களிலிருந்தும் மக்கள் வந்திருந்தனர். பெண்மக்கள் அந்தச் சிறு ஊரிலும் நிறைய வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. கூட்டத்தைச் சிறப்பாக நடத்திக் கொடுத்த உத்தரகோசமங்கை அன்பர்களுக்கும், திரு. குமரேசன் அவர்களுக்கும் சமாஜம் நன்றி தெரிவிக்கிறது—ஜி. கலியாணம்

## விருதுநகர் சைவசித்தாந்தக் கழக
## சுந்தரமூர்த்தி நாயனார் விழா

16—8—53 மாலை 5-மணிக்கு கார்காத்தார் பஜனை மடாலயத்தில் திரு. வித்வான் இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தலைமையில் சுந்தரர்விழா நடைபெற்றது. தேவாரப் பாடல்களுடன் கூட்டம் ஆரம்பித்தது. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் வித்வான் ந. சேதுரகுநாதன் அவர்கள் 'ஆரூரர் தேவாரம்' என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். கே. வி. எஸ். உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்வான் கு. செல்லையா அவர்கள் 'முதலும் இறுதியும், என்னும் பொருள் பற்றிப் பேருரை வழங்கினார்கள். தலைவர் முடிவுரையில் இல்லறத்திலிருந்து வீடுபேறு அடையலாம் என்ற கருத்தைச் சுந்தரர் வாழ்ந்து காட்டியுள்ளார் என்றும், அவர்தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி நல்வாழ்வு வாழவேண்டுமென்றும் கூறினார்கள். பின் கழகச் செயலாளர் ப. பொன்ன[illegible] கூறியபின் கூட்டம் இனிது முடிந்தது—ப. [illegible]ன்னம்பலம், செய[illegible]ர்.

Regd. M. 2330 "SIDDHANTHAM" Vol. 26—No. 9

# சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரியபுராணம்—அகராதியுடன் ... | 3 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ... | 1 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை .... | 0 | 12 |
| திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை) ரூ. 8. அங்கத்தினருக்கு | 7 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) ... | 0 | 8 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல. ... | 0 | 2 |
| சிவஸ்தல யாத்திரை பஞ்சரி ... | 0 | 4 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

## குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா வீதமும், முழு மலரல்லாத தனி இதழ் ஓர் அணா வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

[மலர் 4 (1931), 14 (1941), 15 (1942), 24 (1951)].

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi, Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, 53, Thiruvalluvar Street, (Jones Road), Saidapet, Madras-15